Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 06 திங்கட்கிழமை (18-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:85

# 24 ஆம் திகதிக்கு முன்னர் யுத்தநிறுத்த உடன்படிக்கை!



## அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை

லண்டன்,பெப்ரவரி18

☆ அரசு - புலிகள் நேரடிப் பேச்சு ஏப்ரல் மாதம் மாலைதீவில் நடைபெறும் என்று வெளியான செய்தி தவறு.

☆ பேச்சுக்குக் களம் அமைத்துத்தர இந்தியா முடிவுசெய்யலாம்.

☆ போர் நிறுத்த உடன்பாடு அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு (24ஆம் திகதிக்கு) முன்னர் கைச்சாத்தாகலாம்.

☆ இயக்கத் தடையை நீக்கினால் அன்றிப் பேசமாட்டோம்.

☆ பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை ஆகியவற்றை முற்றாக நீக்கவும், யாழ்.குடாநாட்டுக்கான பாதையைத் திறக்கவும் அரசு இணங்கியுள்ளது. இவற்றை ஒரு கால அட்டவணைப்படி, ஒரு சில மாதங்களில் முடிக்க அரசு சம்மதித்துள்ளது. இவை உடன்பாட்டில் மிக முக்கியமான அம்சங்களாக அமைந்துள்ளன.

- இவ்வாறு மிகுந்த நம்பிக்கை தொனிக்க 'உதயன்', - 'சுடர் ஒளி' பத்திரிகைகளுக்கு லண்டனிலிருந்தவாறு தகவல் தந்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி மாலைதீவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் பேச்சு நடைபெறவுள்ளதாகக் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியாகிய செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாக மறுத்துள்ளது.

இது குறித்து அன்ரன் பாலசிங்கத்திடம் வினவிய போது, "இது முற்றிலும் தவறான செய்தி" என்று அவர் குறிப்பிட்டார்.

"அரசியல் பேச்சுகள் ஆரம்பமா

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளராக நிற்க விரும்புகிறார் அனுரா!

கொழும்பு,பெப்.18

2005ஆம் ஆண்டு நடைபெறும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தான் போட்டியிட விரும்புவதாக அனுரா பண்டாரநாயக்கா அறிவித்திருக்கின்றார்.

எதிர்க்கட்சித் தலைவா பதவிக்கான போட்டியில் மஹிந்த ராஜபக்ஷவிடம் தோற்றுப்போன அனுரா பண்டாரநாயக்கா, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பத்தைக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிற்க நான் விரும்புகின்றேன். ஜனாதிபதிக்கு (சந்திரிகா குமாரதுங்கவுக்கு) பின்னர் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபர் நான்தான் என்று நான் கருதுகின்றேன்." - என்றார் அனுரா.

"மஹிந்த ஒரு சிறந்த உதவியாளர். ஒரு சிறந்த அமைப்பாளர் என்ற வகையில் அவர் அதிகம் பயன்படுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை நாடாளுமன்றத்துக்குள் மட்டுமல்லாது வெளியிலும் பல

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இறுதி வரைவுடன் நோர்வேக்குழு நாளை லண்டனுக்கு!

லண்டன், பெப்.18

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் இறுதி வரைவுடன் நோர்வே சமாதானக் குழு நாளை லண்டனில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவிருக்கின்றது.

அந்தச் சந்திப்பின் பின்னர் நோர்வேத் தூதுக் குழு கொழும்பு சென்று உடன்படிக்கையின் இறுதி வரைவை இரு தரப்புடனும் உறுதி செய்யும் தனது நடவடிக்கையைப் பூர்த்தி செய்யும். (உ)

## கிழக்கு பல்கலையில் மீண்டும் 'பொங்கு தமிழ்'

கிழக்குப் பல்கலைச் சமூகத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் புதன்கிழமை மட்டக்களப்பில் மீண்டும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு இடம்பெற உள்ளது.

மட்டக்களப்பு கோட்டை முனை மைதானத்தில் காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை 'பொங்கு தமிழ்' நிகழ்வு இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை அகற்றும்படி வலியுறுத்தும் விதத்திலும், தமிழர்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்பதை வெளிப்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைச் சமூகம், மட்டக்களப்பு அனைத்து மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. மட்டக்களப்பில் உள்ள பொது அமைப்புகள் பலவும், 'பொங்கு தமிழுக்கு' தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளன. (ம-9)

## சமாதானப் பேச்சு அடுத்த மாதத்தில்!

### பிரதமர் ரணில் நம்பிக்கை

சிங்கப்பூர்சிற்றி,பெப்.18

விடுதலைப் புலிகளுடன் அமைதிக்கான நேரடிப் பேச்சுகளை அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

நோர்வேயின் உதவியுடன் இந்தப் பேச்சுக்களை அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையை சிங்கப்பூர்த் தலைவர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டார் என்ற தகவலை சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்தது. நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு-கிளிநொச்சி பஸ் சேவை ஆரம்பம்!

கொழும்,பெப்.18

கொழும்பு - கிளிநொச்சி பஸ் சேவை நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இரண்டு சொகுசு பஸ்களையும் மற்றும் இரண்டு சாதாரண பஸ்களையும் மத்திய போக்குவரத்துச் சபை இச்சேவையில் ஈடுபடுத்தியிருப்பதாக அச்செய்தி தெரிவித்தது.

சாதாரண பஸ்ஸுக்கு 200 ரூபாவும், சொகுசு பஸ்ஸுக்கு 400 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### சாட்டியிலிருந்து தெல்லிப்பழை வரை

## சமாதானத்தை வலியுறுத்தி குடாநாட்டில் பாதயாத்திரை

### 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,பெப்.18

நோர்வே அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் குடாநாட்டில் சமாதானப் பாதயாத்திரை ஒன்று இடம்பெறவுள்ளது.

நேற்று மாலை யாழ்ப்பாணம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையஅலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த 47 அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

சாட்டி மாதா ஆலயத்திலிருந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் வரை இந்தச் சமாதானப் பாதயாத்திரையை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாட்டி சித்திரை மாதா ஆலய முன்றிலில் இருந்து பாதயாத்திரை ஆரம்பமாகும். யாழ். நகர் ஊடாக மாலை 5.30 மணியளவில் நல்லூர் ஆலயத்தை வந்தடைவதோடு பாதயாத்திரை அன்றைய தினம் நிறைவுபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து காலை 8.30 மணிக்கு மீண்டும் பாதயாத்திரை ஆரம்பமாகும். கே.கே.எஸ். வீதியூடாக தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தை அது சென்றடையும்.

பாதயாத்திரையின் இறுதியில் அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அங்கு வைத்து ஜனாதிபதி மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் தொண்டா இன்று புலிகளின் பகுதிக்குச் செல்கிறார்

மட்டக்களப்பு,பெப்.18

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இன்று செல்லவுள்ளார்.

மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு ஹெலியில் வந்திறங்கும் அமைச்சர், அங்கிருந்து வாகனத்தில் பட்டிருப்புப்பாலம் ஊடாக விடுதலைப் புலிகளின் பகுதிக்குச் செல்வார்.

கொக்கட்டிச் சோலையில் அவர் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-8)

### (மகேஸ்வரனின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு)

## பண்டாரவளையிலும் அ'புரவிலும் றானுக்கு விருந்தினர் விடுதியா?

### இல்லை என்கிறார் ஜயலத் ஜயவர்த்தன

கொழும்பு,பெப்.18

"வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட 'றான்' அமைப்பு பண்டாரவளையிலும் அநுராதபுரத்திலும் விருந்தினர் விடுதி அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கு மக்கள் தங்கிச்செல்ல இந்த விடுதி அமைக்கப்படுவதாக அந்த அமைப்புக் கூறுகின்றது" - என அமைச்சர் தி.மகேஸ்வரன் கூறிய குற்றச்சாட்டை புனர்வாழ்வுக்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன அடியோடு மறுத்திருக்கின்றார்.

அத்தகைய விடுதி அமைக்கும் நோக்கமோ, திட்டமோ கிடையாது என்று குறிப்பிட்ட அமைச்சர் ஜயலத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கஜேந்திரகுமார் நேரில் சென்று விளக்கம்

# புலிகளை நியூசிலாந்து அரசு தடைசெய்ய முயல்வது தவறு

## அந்நாட்டின் உயர் வட்டாரங்களிடம் வற்புறுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.18

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமது நாட்டில் தடைசெய்யும ஒரு தவறான நடவடிக்கையை நியூசிலாந்து செய்துவிடக்கூடாது.

- இவ்வாறு நியூசிலாந்து நாட்டின் அரச உயர் வட்டாரங்களை நேரில் சந்தித்து வற்புறுத்தியிருக்கின்றார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பிரமுகருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

கடந்த வாரம் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட அவர், தமது விஜயத்தின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

**ஆஸ்திரேலியாவில்**

ஆஸ்திரேலியாவில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பிரதமரினதும், அமைசசர்களினதும் - குறிப்பாக வெளிநாட்டமைச்சரினதும் - அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் பின்வரும் விடயங்களை வற்புறுத்தினார்:-

☆ ஈழத்தமிழ்த் தேசிய இனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால் நிற்கின்றது என்பது கடந்த பொதுத் தேர்தலில் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

☆ தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான எந்தப் பேச்சிலும் தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளே பங்குபற்றலாம் என்பதை தமிழ் மக்கள் தெளிவுபடுத்தி விட்டனர். அதனை இலங்கை அரசும் ஏற்று, புலிகளுடன் பேச்சு நடத்தத் தயாராகிவருகின்றது; புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலனை செய்துவருகின்றது.

☆ இந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சு நடக்காமல் குழப்பவும், தீர்வு கிட்டாமல் குழப்பவும் திட்டமிட்டுள்ள



சிங்கள இனவாத சக்திகளும் சில எதிர்க்கட்சிகளும் புலிகள் மீதான தடை இலங்கையில் நீக்கப்படுவதை எதிர்க்கத் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிநாடுகள் பல தடைசெய்திருக்கையில் அந்த இயக்கம் மீதான தடையை இலங்கை நீக்குவது தவறானது என்று அந்த சக்திகள் கூக்குரலிட்டு வருகின்றன.

☆ இலங்கையில் சமாதானம் தோன்றவும், அமைதித் தீர்வு கிட்டவும் வாய்ப்பளிக்கும் புறச்சூழ்நிலை தோன்றியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், விடுதலைப் புலிகள் அமைப்பை தனது நாட்டில் தடைசெய்வதாக அறிவித்ததன் மூலம் மேற்படி சமாதான சூழ்நிலையைக் குழப்பும் சக்திகளுக்கு ஆஸ்திரேலியா துணைபோயிருக்கின்றது; அச்சக்திகளின் கைகளை ஆஸ்திரேலியா பலப்படுத்தியிருக்கின்றது.

☆ இன்றைய சூழ்நிலையில் நடுநிலை நின்று நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு முழு ஆதரவு நல்குவதே ஆஸ்திரேலியா வழங்கக்கூடிய பொறுப்பான பங்களிப்பாகும்.

- இப்படி ஆஸி. அதிகாரிகளிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

ஆஸ்திரேலியா புலிகளைத் தடைசெய்த காலகட்டம் தவறானது என்பதைத் தாம் சந்தித்த ஆஸி.பிரமுகர்கள் பலரும் ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்த அவர், தடையை மறுபரிசீலனை செய்ய ஆஸி. அரசு தயாராக இருப்பதாகவும் -

சமாதானத் தீர்வுக்கான முயற்சிகளை உன்னிப்பாக அரசு கவனிப்பதாகவும் -

தன்னிடம் குறிப்பிட்டதாகச் சொன்னார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ மக்கள் மத்தியில் பல சந்திப்புக்களையும் கூட்டங்களையும் அவர் நடத்தினார்.

**நியூசிலாந்தில்**

நியூசிலாந்துக்கு விஜயம் செய்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கும், அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார்.

நியூசிலாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஆலோசகர்களைச் சந்தித்த அவர் -

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு, சமாதான பேச்சுக்குத் தயாராகும் வேளையில் அதைப் பாதிக்கும் விதத்தில் - தவறான நேரத்தில் - தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளைச் சேர்த்து, ஆஸ்திரேலிய அரசு செய்தது போன்ற தவறை நியூசிலாந்து அரசும் செய்துவிடக்கூடாது என்று கோரினார்.

அதற்குப் பதிலாக, தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான ஆதரவை வழங்க நியூசிலாந்து அரசு முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து நியூசிலாந்து நாடாளுமன்றம் அடுத்தமாதம் விவாதித்துத் தீர்மானம் எடுக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## யாழ்.கலட்டிச் சந்தியில்

# பிறவுண் வீதித் தடை நேற்று படையினரால் அகற்றப்பட்டது!

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.கலட்டிச் சந்தியில் பிறவுண் வீதியை ஊடறுத்து இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த வீதித்தடை நேற்று அகற்றப்பட்டுள்ளது.

இதனால் கடந்த சில வருடங்களின் பின்னர் இந்த வீதி ஊடாக வாகனங்கள் சென்றுவர வசதி ஏற்பட்டுள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின வசதி கருதி இந்தப் பாதையை வாகனப் போக்குவரத்துக்குத் திறந்து விடுமாறு கடந்த வருடம் கோரப்பட்டிருந்தது.

எனினும் பாதுகாப்புக் காரணங்களைக் கூறிப் படையினர் இந்தப் பாதையை வாகனப் போக்குரவத்துக்குத் திறந்துவிட அப்போது மறுத்து விட்டனர்.

தற்போது இந்தப் பாதை திறந்து விடப்பட்டுள்ளதை அடுத்து இந்த வீதியூடாகப் பஸ்சேவைகளும் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

யாழ்.எம்ரான்லி வீதியில் வெலிங்டன் தியேட்டர் சந்தியில் 512ஆவது படையணியின் தலைமையகம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த வீதித்தடைகளும் மண்மூடைகளும் அகற்றப்பட்டுப் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இலகுபடுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-6-9)

### பாதுகாவலர் சங்கக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.18

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை றக்கா வீதியிலுள்ள சங்கச் செயலரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள 'சமாதானத்திற்கான சர்வமதப் பாதயாத்திரை' தொடர்பாகவும் -

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரைச் சென்று பார்ப்பதற்காக உறுப்பினர்களைத் தெரிவுசெய்வது தொடர்பாகவும் -

இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)


**OFFSET PRINTING**

சகல விதமான பதிப்பு வேலைகளையும் OFFSET PRINING செய்து கொள்ளவும், நினைவு மலர், பாடப் புத்தகங்கள் மற்றும் திருமண அழைப்பிதழ்கள், லேபல்கள் போன்றவற்றை அச்சிட்டு பெற்றுக்கொள்ளத் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

**தேவி அச்சகம்**


114/19 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி20795)



**தவறிவிட்டன**

கைதடி, நுணாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த சிவகடாட்சசர்மா செந்தில்நாதசர்மா என்பவரது (தே.அ.அ. இல.822611869V) வீசேட அ.அ.(இல. 09.006630.), பாஸ் என்பன நல்லூர்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நல்லூர் சிவன் கோயிலில் ஒப்படைக்கவும். (833)


## சவேரியார் குடும்பத்தின் கண்ணீர் அஞ்சலிகள்



ஆண்டுகள் பல எம் குருமடத்தின் வளர்ச்சிக்காய், எம் வாழ்வின் உயர்விற்காய் உழைத்து, இன்று இறைவனடி சேர்ந்துள்ள அருட்திரு. எட்றியன் ஜோசப் (அ.ம.தி.) அடிகளாரின் பிரிவின் துயரால் எழும் சிலவரிகள்.

கணீர் என்ற குரலும்
கம்பீரத் தோற்றமும்
சிவந்த மேனியும்
சிரித்த வதனமும்
ஒளிநிறைந்த விழிகளும்
தந்தையின் *புறம்*
கள்ளமற்ற உள்ளமும்
களங்கமற்ற சிந்தையும்
தந்தையின் *அகம்*
நீடிய பார்வையும்
நேரிய நோக்கமும்
கூரிய அறிவும்
தந்தையின் சிறப்பு
எம்மோடு வாழ்ந்தீர்
நகைச்சுவையாய்
நாலு வார்த்தைகள்.....
சிரித்தீர்......
மகிழ்ந்தீர்.....
உம்மை உருக்கி
எம்மை வளர்த்தீர்
ஞான வழி காட்டினீர்
அறிவொளி ஊட்டினீர்
கலை வழி செல்ல
தட்டிக் கொடுத்தீர்
மறவோம்.....
மனங்களில்
பொதித்து வைப்போம்!
பிரார்த்திப்போம்
உம் ஆன்மா
நித்தியத்தில் சாந்திகொள்ள..

அதிபர், குருக்கள், மாணவர்கள், புனித. சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை.
(840)

# புத்தளம் நகரசபைத் தலைவர் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கே கிடைக்கும்

## கட்சியின் தேசிய அமைப்பாளர் கூறுகிறார்

ஐக்கியதேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் செய்து கொண்டுள்ள தேர்தல் ஒப்பந்தப்படி புத்தளம் நகர சபையின் தலைவர் பதவி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வழங்கப்படும்.

புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தேசிய அமைப்பாளருமான கே.ஏ.பாயிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் இடம்பெற்ற விசேட பத்திரிகையாளர் மாநாட்டில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய அரசின் காலத்தில் உள்ளூராட்சிச் சபைகளில் முஸ்லிம் காங்கிரஸ் வகித்த பதவிகளை மீண்டும் வகிக்க ஒப்பந்தத்தில் வழி செயயப்பட்டுள்ளது. நாம் ஐ.தே.கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்ட காரணத்தினால் தனது தலைவர் பதவி பறிக்கப்பட்டது.

புத்தளம் நகர சபையில் எத்தனை ஆசனங்களை ஐ.தே.முன்னணி கைபபற்றும் என வினா எழுப்பிய போது மொத்தமாகவுள்ள ஒன்பது ஆசனங்களில் ஐ.தே.க.முன்னணி ஆறு அல்லது ஏழு ஆசனங்களைப் பெறும். ஆறு கிடைத்தால் முஸ்லிம் காங்கிரஸுக்கு மூன்று கிடைக்கும் ஏழு கிடைத்தால் நான்கு உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருப்பர் என்று அவர் பதிலளித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான ஐவரும் தோல்வியுற்றால் தலைமைப்பதவியைப் பெற காங்கிரஸ் முயற்சி செய்யுமா என வினவிய போது மக்கள் எம்மை ஒதுக்கினால் நாமும் ஒதுங்கிக் கொள்ளத்தயார். ஆனால் மக்கள் அலை முஸ்லிம் காங்கிரஸ் பக்கமே பலமாக அடித்துக் கொண்டிருக்கின்றது என்றார் ஏ.பாயிஸ்.

# 24 ஆம் திகதிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு முன்னர் ஒரு நிலையான - நிரந்தரமான - அமைதி நிலை உருவாக வேண்டும். இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதியான போர் நிறுத்த உடன்பாடு ஏற்படவேண்டும். கடந்த இரண்டு மாதங்களாக நோர்வே சமாதானக்குழு மேற்கொண்ட விடா முயற்சி காரணமாகப் போர்நிறுத்த உடன்பாடு முழுமைபெறும் தறுவாயில் இருக்கிறது. அநேகமாக இவ்வுடன்பாடு இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்தாகலாம் என நம்புகிறோம்.

"நிரந்தரமான அமைதிநிலை பேச்சுக்கு ஓர் உறுதியான அத்திவாரம் போன்றது. அதனால்தான் பேச்சுக்கு முன்னதாக அமைதிநிலை உருவாக்கப்படுவதற்கு நாம் முதன்மை கொடுக்கின்றோம்" - என்று பாலசிங்கம் கூறினார்.

"இருதரப்பும் ஏற்றுக்கொண்ட போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர், வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை உருவாக்க ஸ்ரீலங்கா அரசு மேலும் பல நல்லெண்ண நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பொருளாதாரத் தடைகள், மீன்பிடித்தடைகள் முற்றாக நீக்கப்படவேண்டும். குறிப்பாக, எமது மீனவ மக்கள் தமக்கு உரித்தான தமிழீழக் கடற்பரப்பில், எவ்வித் தடைகள், கட்டுப்பாடுகளுமின்றி, சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

"அடுத்ததாக, குடாநாட்டுக்கான தரைப்பாதை விரைவில் திறந்துவிடப்பட வேண்டும். புவியியல் ரீதியாக யாழ்ப்பாணமும் வன்னியும் பிணைக்கப்பட்டு, பொதுமக்களும் ஆயுதந்தரிக்காத எமது அரசியற் போராளிகளும் இப்பாதையூடாக சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்யும் வாய்ப்பு ஏற்படவேண்டும்.

"யாழ்ப்பாணக் குடாநாடு வன்னியுடனும் தென்னிலங்கையுடனும் தரைமார்க்கமாக இணைக்கப்பட்டால் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள எமது மக்களின் சமூக, பொருளாதார, போக்குவரத்துச் சிக்கல்களுக்கு தீர்வு ஏற்படும்" - என்றார் பாலசிங்கம்.

"இவற்றையெல்லாம் படிப்படியாகச் செய்வதாக அரசு எமக்கு உறுதியளித்திருக்கிறது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் எமது போராளிகளின் சுதந்திர நடமாட்டம், ஆயுதந்தரிக்காத இராணுவத்தினர் கண்டி வீதியால் வன்னியூடாகத் தென்னிலங்கை செல்வதற்கான அனுமதி, யாழ்ப்பாணத்துக்கான பாதை திறப்பு, மீன்பிடி மீதான பூரண தடைநீக்கம் ஆகிய விடயங்களை ஒரு கால அட்டவணையின் அடிப்படையில் - அதாவது ஒரு சில மாதங்களுக்குள் - தீர்த்துவைக்க அரசு இணங்கியிருக்கிறது. இக்கால அட்டவணை போர்நிறுத்த உடன்பாட்டின் முக்கிய அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

"ஆகவே, நிரந்தர போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதும் ஒரு குறுகிய காலத்துக்குள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுமென எமக்கு நம்பிக்கையுண்டு" - என்றார் அரசியல் ஆலோசகர்.

"அடுத்த முக்கியமான விடயம் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம். எமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டு, எமது விடுதலை அமைப்பை தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்று, எமக்கு சட்டபூர்வமான - சமத்துவமான - அந்தஸ்து வழங்கப்பட்டாலன்றி நாம் பேச்சுகளில் பங்குபற்றப்போவதில்லை. இது எமது உறுதியான நிலைப்பாடு" - என்றார் பாலசிங்கம்.

"மாலைதீவில் எனக்குப் போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால், அங்கு பேச்சுகள் நடைபெறுவதை நாம் விரும்பவில்லை. தென்னிந்தியா உகந்த இடம். எல்லா வசதிகளுக்கும் ஏதுவான இடம். இந்திய மண்ணில் சமாதானத்துக்கான பேச்சு நிகழ்வதை நாம் விரும்புகின்றோம். இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உதவுவது பிரதேச வல்லரசு என்ற ரீதியில் இந்தியாவுக்கு ஒரு கடப்பாடாகும்.

"பேச்சுக்குத் தளம் அமைத்துக் கொடுப்பது பற்றி மத்திய அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை. சில சமயம் காலப்போக்கில் ஒரு நல்ல முடிவை அது எடுக்கலாம். சமாதானப் பாதைக்கு இந்திய அரசு கதவடைத்துவிடுமானால் நாம் வேறு இடம்பற்றிச் சிந்திக்கலாம். அதற்குக் காலம் இருக்கிறது" - எனக் குறிப்பிட்டார் அன்ரன் பாலசிங்கம். (உ)

## மரண அறிவித்தல்

**விவிலிய பேராசிரியர் அருள் தந்தை**

**அதிரியான் யோசப் (அ.ம.தி.)**

விவிலியப் பேராசிரியர் அருள்தந்தை அதிரியான் யோசப் (அ.ம.தி.) அவர்கள் நேற்று (17-02-2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை அமல உற்பவ இல்லத்தில் இறைபதம் அடைந்தார்.

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருள்தந்தை அவர்கள் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1951 ஆம் ஆண்டு அருள் பணியாளனாக திருநிலைப்படுத்தப்பெற்று புனித லூசியா பேராலயம் (கொழும்பு), கொச்சிக்கடை, கற்கரைத் தெரு (நீர்கொழும்பு) ஆகிய பங்குகளில் பணியாற்றியுள்ளார். நுகேகொட புனித வளனார் குருமடம், கொழும்புத்துறை புனித வளனார் குருமடம் ஆகியவற்றின் அதிபராகவும் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட ஆன்மீகக் குருவாகவும் விவிலியப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

அமரரான அடிகளாரின் புதவுடல் அஞ்சலிக்காக இன்று (18-02-2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை கொழும்புத்துறை புனித வளனார் ஆலயத்தில் வைக்கப்படும். பின்னர் மாலை 4 மணிக்கு, புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
அருள்திரு. போல் நட்சத்திரம் (அ.ம.தி.)
'தொடர்பகம்'
(841)

## தனியார் கல்விநிலையத்தில் கற்ற
# நாற்பது மாணவிகள் கர்ப்பம்; ஆசிரியர்கள் தலைமறைவு!
### தமிழகத்தில் பெரும்பரபரப்பு

சென்னை,பெப்.18

தமிழகத்தின் தர்மபுரி மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் பயின்றுவந்த 40 மாணவிகள் ஒரே சமயத்தில் கர்ப்பம் தரித்திருப்பது பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தர்மபுரி அரசுப் பெண்கள் உயர் நிலைப் பாடசாலையில் உயர்தர வகுப்பில கல்விகற்றுவந்த மாணவிகள் தனியார் கல்வி நிலையம் ஒன்றிலும் படித்துவந்தனர். பாடசாலை முடிவடைந்தபின்னர் பிற்பகல் 4.30 மணிமுதல் இரவு 7 மணிவரை தனியார் கல்வி நிலையத்தில் வகுப்புகள் நடந்தன.

இந்த நிலையில் அங்கு படித்து வந்த இரு மாணவிகள் கர்ப்பம் தரித்தமை தெரியவந்தது. அவர்கள் அவமானத்தால் தற்கொலை செய்து கொண்டனர்.

இதனையடுத்து அங்கு படித்த மற்றைய மாணவிகள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர். அவர்களில் சுமார் 40 மாணவிகள் கர்ப்பம் தரித்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.


தனியார் கல்வி நிறுவனத்தை நடத்திய ஆசிரியர்களே மாணவிகள் கர்ப்பம் தரிக்கக் காரணம் என்று கூறப்படுகிறது. தற்போது ஊராரின் கோபத்துக்குப் பயந்து தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் தலைமறைவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ)

# மேற்குக் கரையில் முதல் தடவையாக பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்!
## பதிலடியாக இஸ்ரேல் குண்டு வீச்சு

நப்லஸ்,பெப்.18

மேற்குக் கரை நகரான நப்லஸில் நேற்றுக் காலை இஸ்ரேலிய விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தாக்குதல் நடத்தின. அப்பகுதியில் உள்ள யூதக்குடியிருப்பில் பலஸ்தீனக் குண்டுதாரி ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்ததில், அவரும், இஸ்ரேலிய இளைஞர்கள் இருவரும் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் 27பேர் காயமடைந்தனர். இளைஞர் கூட்டம் நிறைந்திருந்த சிற்றுண்டிச் சாலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் நடந்த இந்தத் தற்கொலைத் தாக்குதலை தமது அமைப்பைச் சேர்ந்த 18 வயதான சதீக் அப்துல் ஹவெத் என்பவரே மேற்கொண்டதாகப் பலஸ்தீன விடுதலைக்கான பிரபல முன்னணி அறிவித்தது.


பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற சிற்றுண்டிச்சாலையில் இஸ்ரேலிய அதிகாரிகள்

கடந்த 16 மாதகால மோதல்களில் மேற்குக்கரைப் பகுதியில் உள்ள யூதக்குடியிருப்பில் தற்கொலைத் தாக்குதல் இடம்பெறுவது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது.

இந்தத் தற்கொலைத் தாக்குதல் நிகழ்ந்த சில மணித்தியாலங்களில் பதிலடியாக நப்லஸ் மீது இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியது.

பலஸ்தீன நிர்வாகசபை அலுவலகம், பொலீஸ் நிலையம் உட்பட 3 கட்டடங்கள் தாக்கியழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இஸ்ரேலிய குடிமக்கள் மற்றும் இராணுவத்தினர்மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்குப் பதிலாக பலஸ்தீன நிலைகள் தகர்க்கப்படும் என்பதை வலியுறுத்தவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய அரசின் பேச்சாளர் அவி பஜ்னர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மேற்குக் கரையின் ஜெனின் நகரில் கார் ஒன்று வெடித்துச் சிதறியதில், அதில் பயணம் செய்த பலஸ்தீனத் தீவிர வாதத் தலைவரான நஜீ அபுசபா என்பவர் உயிரிழந்தார். அதேதினத்தில் காஸாவில் இஸ்ரேலிய டாங்கிகள் அல்புரெஜ் பலஸ்தீன அகதி முகாமில் நுழைய முயன்றபோது நிகழ்ந்த துப்பாக்கிச் சமரில் இரு சிறுவர்கள் உட்பட 3 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். (ஒ)



நேற்று இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் சேதமடைந்த பலஸ்தீன அதிகார சபை அலுவலகக் கட்டடத்தை பலஸ்தீன அதிகாரிகள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# பங்களாதேஷ் தேசபிதா முஜிபுரின் கொலை வழக்கில் பின்னடைவு

டாக்கா,பெப்.18

பங்களாதேஷின் தேசபிதா என்று போற்றப்படும் முஜிபுர் ரஹ்மானை இராணுவப் புரட்சியின்போது கொலை செய்தவர்கள் மீதான வழக்கு விசாரணையை மேற்கொள்ள சிறப்பு நீதிபதிகளை நியமிப்பதில் காலதாமத மேற்பட்டதால், விசாரிக்க வேண்டிய வழக்குகளின் பட்டியலில் இருந்து இந்தக் கொலை வழக்கை பங்களாதேஷ் உயர்நீதிமன்றம் நீக்கிவிட்டது. முஜிபுர் ரஹ்மான் கொலை வழக்கில் இது ஒரு பின்னடைவாகக் கருதப்படுகிறது. இந்த வழக்கை கைகழுவி விடப் பிரதமர் பேகம் ஜியாவின் அரசு முயற்சிப்பதாக அரசுதரப்பு சட்டத்தரணிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். முஜிபுர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹசீனா 1996இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், பேகம ஜியா தலைமையிலான தமது அரசியல் எதிரிகள் கொலையாளிகளைப் பாதுகாப்பதாகக் கூறி, வழக்கு விசாரணையை துரிதப்படுத்த நடவடிகைை எடுத்தார்.

கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட 12 இராணுவ அதிகாரிகளுக்கு டாக்கா மேல் நீதிமன்றம் ஏற்கனவே மரண தண்டனை விதித்துள்ளது.

தண்டனை விதிக்கப்பட்டவர்களின் மேன்முறையீடு உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளபோது ஷேக் ஹசீனா தேர்தலில் தோற்று பேகம் ஜியா பிரதமரானார்.

இந்த நிலைமையிலேயே முஜிபுர் ரஹ்மான் கொலை வழக்கில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. (ஒ)

# ஈராக் மீதான தாக்குதலுக்கு ஆதரவு தேடுகிறது அமெரிக்கா

வாஷிங்ரன்,பெப்.18

பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் அடுத்த நடவடிக்கையாக ஈராக்மீது தாக்குதல் நடத்த சர்வதேச சமூகத்தின் ஆதரவை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அமெரிக்கத் துணை அதிபர் டிக் சென்னி தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவு சபையின் கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் இதனைக் கூறினார்.

ஈராக்மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமெரிக்க மக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் முழு ஒத்துழைப்பையும் அமெரிக்க அரசு எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

சமீபத்திய காலகட்டத்தில் ஈரானிய அரசின் போக்கு தனக்கு ஏமாற்றமளிப்பதாகவும் சென்னி கூறினார்.

மத்திய கிழக்கில் ஈராக்கின் 11 அயல் நாடுகளுக்கு அடுத்த மாதம் விஜயம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்கத் துணை அதிபர், ஈராக் மீதான அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கு அந்த நாடுகளின் ஆதரவைத் திரட்டுவார் என்று நம்பப்படுகிறது.

# உதைபந்தாட்ட ரசிகர்கள் ஆப்கான் படையுடன் மோதல்!

காபூல்,பெப்.18

ஆப்கானில் கடந்த வெள்ளிக்கிழமை உதைபந்தாட்டப் போட்டி ஒன்றைக் கண்டுகளிக்கத் திரண்ட ரசிகர்களுக்கும், ஆப்கான் பொலீஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது.


மைதானச் சுவரை தாண்டுபவரை அடித்து விரட்டும் ஆப்கானியப் பாதுகாப்பு அதிகாரி

காபூலில் உள்ள விளையாட்டுத் திடலில் உள்ளூர் அணிக்கும், அங்கு நிலைகொண்டுள்ள சர்வதேச அமைதிப்படையின் அணிக்கும் இடையே உதைபந்தாட்டப் போட்டி ஏற்பாடாகியிருந்தது. 'ஐக்கிய உதைபந்தாட்டம்' என்று பெயரிடப்பட்ட இந்தப் போட்டியை பிரிட்டன் ஒழுங்குசெய்திருந்தது.

போட்டியைப் பார்ப்பதற்கு அனுமதிச்சீட்டுகளும் விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் போட்டி ஆரம்பித்த சமயம் அனுமதிச் சீட்டுக்களின்றி, நூற்றுக்கணக்கான ஆப்கானியர்கள் மைதானத்துக்குள் நுழைய முண்டியடித்தபோது பாதுகாப்புப் படையினர் அவர்களைத் தடுத்ததால் மோதல் மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டது மற்றும் பாதுகாப்புப் படையினருடன் மக்கள் மோதலில் ஈடுபடுவது ஆகிய சம்பவங்கள், ஆப்கானில் பாதுகாப்புக் குறித்த உத்தரவாதத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

# சர்வதேச அமைதிப்படைமீது ஆப்கானில் துப்பாக்கிச்சூடு!

லண்டன்,பெப்.18

ஆப்கானிஸ்தானில் முதற்றடவையாக அங்கு உள்ள சர்வதேசப் பாதுகாப்பு படையினர் முதற்றடவையாக துப்பாக்கித் தாக்குதலை எதிர்கொண்டுள்ளனர்.

கண்காணிப்பு நிலையம் ஒன்றில் இருந்த சர்வதேசப் படையின் 6 அதிகாரிகள்மீது துப்பாக்கிதாரி ஒருவர் சுட்டதாக பிரிட்டிஷ் இராணுவத் தலைவர் கேணல் ரிச்சேட் பாரன்ஸ் தெரிவித்தார்.

தமது படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் - பின்னர் சம்பவ இடத்தில் தேடுதல் நடத்தியபோது அங்கிருந்து ஒரு வீட்டில் கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்புட்டதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

# மீன்பிடிப்பது அதிகரிப்பதால் கடல் வளங்கள் அழிகின்றன
## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

பொஸ்டன்,பெப்.18

ஆழ்கடலில் மீன்பிடிப்பது அதிகரிப்பதால், சிலவகை மீன் இனங்கள் முற்றாக அழிந்துவிடும்நிலை உருவாகியுள்ளது. அத்துடன் அப்பகுதிகளின் இயற்கைச் சூழலும் மாறிவிட நேர்கிறது.

அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் நடந்த அறிவியல் மாநாட்டில் அமெரிக்க விஞ்ஞானிகள் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இராணுவப் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட அதி சக்திகொண்ட நவீன தொழில்நுட்பக் கருவிகளை மீன்பிடிக் கப்பல்கள் பயன்படுத்தி வருகின்றன. ஆதலால், கடந்த காலத்தில் எட்டமுடியாத ஆழமான கடல்களில் எல்லாம் இப்போது மீன் பிடிக்கப்படுகிறது.

குறிப்பாக நியூசிலாந்தைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் கடந்த பத்து ஆண்டுகளில் 50 சதவீத இயற்கைச் சூழல் அழிக்கப்பட்டுள்ளது.

இந்த அளவுக்குத்தான் மீன் பிடிக்கலாம் என்று பாரிய மீன்பிடி நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடு விதித்தால் மட்டும் போதாது. சில கடற் பகுதிகளில் மீன்பிடிப்பதை முற்றாகத் தடைசெய்யவேண்டும். அப்போதுதான் கடல் வளங்கள் அடியோடு அழிந்துபோவதைத் தடுக்க முடியும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-9)

# ஆப்கான் அமைச்சர் கொலையில் அரச அதிகாரிகளுக்குத் தொடர்பு!

ஆப்கானிஸ்தானில் அமைச்சர் ஒருவர் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 3 சிரேஷ்ட அரசு அதிகாரிகளையும் ஆப்கான் அரசிடம் கையளிக்கச் சவூதி அரேபியா சம்மதித்துள்ளது. இந்த மூவரைவிட மேலும் 7 சந்தேக நபர்கள் ஆப்கானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காபூல் விமான நிலையத்தில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அப்துல் ரஹ்மான் அடித்துக் கொல்லப்பட்டபின்னர், அங்கிருந்து சென்ற ஹஜ் யாத்திரிகர்கள் குழுவில் இடம் பெற்றிருந்த குறிப்பிட்ட 3 சந்தேக நபர்களையும் உடனடியாக ஆப்கான் திரும்புமாறு இடைக்கால அரசின் அதிபர் ஹமீட் கராசி உத்தரவிட்டிருந்தார்.

புலனாய்வுத்துறையின் தலைவர் ஜெனரல் அப்துல்லா ஜன் டௌஹிடி, தொழில்நுட்ப விவகாரம் குறித்த பாதுகாப்புத் துணை அமைச்சர் ஜெனரல் கலந்தர் பெக், நீதி அமைச்சின் உயர் அதிகாரி சரண்வால் அலிம் ஆகிய அந்த மூவரும் நாடு திரும்ப மறுத்ததையடுத்து சவூதி அரேபிய பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்கள் ஆப்கானிய இடைக்கால அரசிடம் கையளிக்கபடுவார்கள் என்று சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேசமயம், காபூல் விமான நிலையத்தில் அமைச்சர் ரஹ்மான் அடித்துக்கொல்லப்பட்ட கொடூரச்

உலக அரங்கில்

சம்பவம் சில மணித்தியாலங்கள் நீடித்தபோதும், ஆப்கான் பாதுகாப்புப் படையினரோ அல்லது அமைதி காப்புப் படையினரோ தலையிட்டு அமைச்சரைக் காப்பாற்றமுடியாமற் போனது ஏன்? என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அமைச்சரின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 3 சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட 10 சந்தேக நபர்களும் வடக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு குழுவைச் சேர்ந்தவர்களாவர். கடந்த ஆண்டு தலிபான்களால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்ட அஹமட்ஷா மசூர் இந்தக் குழுவை நடத்திவந்தார். கொல்லப்பட்ட அமைச்சர் ரஹ்மான் முன்னர் இந்தக் குழுவில் அங்கம் வகிததார். பின்னர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டபோது ஆப்கானின் முன்னாள் மன்னர் ஷாகிர் ஷாவின் ஆதரவாளராக அவர் மாறினார்.

ஆப்கானின் புலனாய்வு, பாதுகாப்பு மற்றும் நீதி அமைச்சகங்களில பணியாற்றும் அதிகாரிகளுடன் அமைச்சர் ரஹ்மான் நீண்டகாலமாகவே தனிப்பட்ட பகைமை கொண்டிருந்ததாக இடைக்கால அதிபர் ஹமீட் கராசி தெரிவித்தார்.

மக்காவுக்குச் செல்லக் காபூல் விமான நிலையத்தில் காத்திருந்த ஹஜ் யாத்திரிகர்கள், அவர்கள் செல்லவேண்டிய விமானங்கள் தாமதமானதால் ஆத்திரமடைந்து, அங்கு வந்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரை அடித்துக் கொன்றதாக முன்னதாகக் கூறப்பட்டது. (ஒ)

# குடலை கருக்கிக் கொல்லும் கசிப்பை ஒழிக்க முழுச் சமூகமும் உடன் கிளர்ந்தெழ வேண்டும்

அந்த இரும்புக்கட்டிலில் பக்கக் கம்பிகளுடன் கைகளும் கால்களும் இழுத்துக் கட்டப்பட்டிருந்த அந்த வயோதிபரின் அலறல் சத்தம் மருத்துவமனையை அதிரவைத்துக் கொண்டிருந்தது.

எவரோ தன்னை வெட்டவருவது போலவும், தன்னை அவிழ்த்து விடும்படியும் அவர் புலம்பிக் கொண்டிருந்தார். பார்ப்பவர்கள் அவர் படும் வேதனையை சகிக்கமுடியாமல் வேறு பக்கம் முகங்களைத் திருப்பிக் கொண்டனர் துக்கத்துடன்.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க அந்த வயோதிபரை சுற்றி அவரது மனைவியும் அவர்களின் திருமணமாகாத மகள்களும் நின்றிருந்தனர். அவர்படும் துன்பம் அவர்களின் கண்களில் கண்ணீராக வழிந்து கொண்டிருந்தது. அந்தப் பெண்கள் கையிலோ, கழுத்திலோ தங்க நகைகள் ஏதுமின்றி வெறுமையாகக் காணப்பட்டனர். அவர்களின் தோற்றம் ஏழ்மையை பறைசாற்றியது.

**...கசிப்பு ஒழிப்பு வெறும் வாய்ப்பேச்சோடு போகிறது - உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல, சமூகச் சீரழிவுப் பிரச்சினையும் முக்கியமானதொன்றுதான்....**

இந்தக் குடும்பத்தின் அவலத்துக்கு காரணம் என்ன? இந்தக் குடும்பத்தையே அலங்கோலப்படுத்திய அந்த அரக்கன் யார்? அவன்தான் 'கசிப்பு அரக்கன்'.

தங்களின் வருமானத்திற்காக கசிப்பை உற்பத்திசெய்து விற்பவர்களும்கூட அரக்கர்கள் - தாம்.

குடாநாட்டு மருத்துவமனைகளில் கடந்த சில வருடங்களாக இந்த வயோதிபரைப் போலவே பல நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு இறுதியில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது. இத்தனைக்கும் காரணமான கசிப்பு என்ற பொல்லாத விஷத்தை தினசரி அருந்தி... அருந்தி... குடல் கருகி உடல் நிலை பாதிக்கப்பட்டு இறுதியில் புத்தியும் பேதலித்து மருத்துவமனைக் கட்டில்களில் உணர்வுகள் ஏதுமின்றி கிடக்கும் அவலம் - கை, கால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் கட்டில்களில் இருந்து குடும்பத்தவரை கண்ணீர் சிந்தவைக்கும் பரிதாபம்!! இவ்வாறு உயிருககாகப் போராடுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் அதிகரித்துவருகிறது. இதனைப்பற்றி விவரங்கள்மூலம் அறியமுடிகிறது.

இளம் வயதினர் முதல் வயோதிபர் வரை வயது வித்தியாசமின்றி இந்த நிலைக்கு ஆளாகிக்கொண்டிருப்பதுதான் கொடுமையான விடயம். சமூகத்தையே சீரழிக்கும் இந்தக் கசிப்பு என்ற நச்சுத்திரவத்தால் குடும்பங்களில் எத்தனை பிரச்சினைகள், பிரிவுகள், அழிவுகள். அதற்கும் மேலாக எத்தனை குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளன.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தின் தனித்துவமான மானம், மரியாதை எல்லாம் 1995 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் கேள்விக்குறியானதற்கு மதுப் பழக்கமும் ஒரு காரணம்.

கொடும் யுத்தத்தால் அழிந்து போயுள்ள எமது பிரதேசத்தில் மன அமைதி வேண்டி பிரார்த்தனை செய்ய கோயில்கள் இருக்கின்றனவோ, இல்லையோ கிராமத்துக்கு கிராமம் கசிப்பு மற்றும் மதுவிற்கு குறைவே இல்லை. இதில் வேதனையான விடயம் என்னவென்றால் சில கோயில்களுக்கு அருகிலும் கசிப்பு விற்பனை 'கொடி'கட்டிப் பறப்பது தான்.

### கசிப்பு குடிப்பதும் தற்கொலை முயற்சியே!

மதுப்பழக்கம் எல்லா மதங்களிலும் குற்றச்செயலாக கருதப்படுகிறது. ஆனாலும் தினசரி கொஞ்சம் கொஞ்சமாக ஈரலையே எரித்துக் கொல்லும். கசிப்பையும் மதுவையும் நாடும் இவர்களின் தற்கொலை முயற்சி தொடர்கிறது.

எமது சமூகத்தையே அழிக்கத் துடிக்கும் சமூக விரோதிகளான கசிப்பு உற்பத்தியாளர்களின் வலைகளில் பாடசாலை மாணவர்களும், ஊனமடைந்தவர்களும் கூட சிக்கிக் கொண்டிருப்பதை எண்ணும்போது...

வேதனை எத்தனை வேதனை...!!

காலை 7 மணியளவில் பாடசாலை சீருடையுடனும் கையில் ஒரு பையுடனும் செல்கிறான் 10 வயது மதிக்கத்தக்க சிறுவன். அவனது நடத்தையில் சந்தேகம் வருகிறது. அவனது பையை வாங்கிப் பார்வையிடுகிறார் ஒருவர்.

அதற்குள் இருக்கின்றன சோடாப் போத்தல்கள். இவற்றில் இருப்பது தண்ணீரல்ல... அது கசிப்பு.

சிறுவனிடம் அது என்ன என்று கேட்டதற்கு, 'பெற்றோல்' என்றே சொன்னான். அவனை மிரட்டிக் கேட்ட போது...

"எனது அப்பாதான் இதைத் தந்து விட்டார். தினசரி பாடசாலைக்கு போகும் முன்னர் அப்பா தரும் கசிப்பு போத்தல்களை அவர் சொல்லும் இடங்களில் கொண்டுபோயக கொடுத்து விட வேண்டும். இல்லாவிட்டால் கொன்றுவிடுவார் அப்பா. அதற்குப் பிறகே பாடசாலைக்குப் போகவும் அனுமதிப்பார் அப்பா...!

"நான் கொண்டுபோய்க் கொடுக்கும் கசிப்பை எல்லோரும் வாங்கி 'நான் முந்தி நீ முந்தி' என்று வாங்கிக் குடிப்பார்கள். போத்தலின் அடியில் மிஞ்சும் கசிப்பை நானும் குடித்துப் பார்ப்பேன். அது பொல்லாத கசப்பு."

## அந்த நாள் எப்போது வரும்?

இவ்வளவும் அந்தப் பிஞ்சு உள்ளத்தின் இதயத்தில் இருந்து வெளி வந்த வார்த்தைகள்.

இது யார் விட்ட தவறு? அந்தப் பாலகனின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது? இப்படி எத்தனை சிறுவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

### அன்றும் இன்றும்

95க்கு முன்னர் சமூகக் கட்டுப்பாடுகள், கலாசார மரபுகள் அனைத்துமே இன்றைய காலத்தில் நூல் அறுந்த பட்டம் போல் திசை தெரியாது போய்க கொண்டிருக்கின்றன. அன்று கசிப்புக் காய்ச்சி இருந்தால் கசிப்புக் காய்ச்சியவனுக்கும் தண்டனை; அதனைக குடித்தவனுக்கும் தண்டனை.

அந்தக் காலகட்டத்தில் சமூகச் சரழிவுகள் இருக்கவில்லை. ஊரே கோயிலாக இருந்தது. இன்று தட்டிக் கேட்க ஆளில்லை. இதன் விளைவு நாளுக்கு நாள் சமூகப் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கசிப்பைக் குடித்துவிட்டு வெட்டுக் குத்து, அடிதடி, சண்டைச் சச்சரவுகள ஒருபுறம்.

தொழில் இல்லாமல் தொழிலே திருட்டாக நடத்திவரும் கூட்டம் மறு புறம்.

### கேவலமான இன்றைய இளைஞர்கள்!

அதிலும் கேவலமான நிலைமை இளைஞர்களின் நடத்தைகள்...!

போதை தலைக்கேற வீதியில் நிற்கும் இவர்களுக்கு வேலை என்று சொல்ல எதுவுமில்லை. வேலை வெட்டி இல்லாத ஓடு காலிகள்...!

இந்த 'வெற்று வேட்டுப் பேர்வழிகள் வீதியால் செல்லும் பெண்களுடன் சேஷ்டைகள் புரிகின்றனர். தங்களின் தாய், சகோதரிகளைக் கூட எண்ணிப்பார்க்காமல் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்கள்.

இந்த அக்கிரமத்தை தட்டிக் கேட்டால் 'சண்டித்தனம்' காட்டும் அசிங்கங்கள். இந்த நிலைமை தொடர்ந்தால் இனத்தின் எதிர்காலம் எங்கே போய்நிற்கும்? எமக்கு இப்போது இரு முக்கிய பிரச்சினைகள். ஒருபுறம் உரிமைப் பிரச்சினை மறுபுறமோ சமூக சீரழிவுப் பிரச்சினை. இவை இரண்டிற்கும் நடுவில் 'தமிழினம்' என்று பெருமை பேசிக் கொள்ளும் நாம்.

எமது பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கிறோம் என்று மேடைகளில் ஏறி நின்று முழங்கும் கூட்டத்திற்கு உரிமைப்பிரச்சினை மட்டுமே கண்களுக்குத் தெரிகின்றன. ஏனெனில் அதன் மூலம் தமக்கு அரசியல் இலாபம் கிடைக்கும் என்ற சுயநலப் போக்கு. சமூக சேவையே எங்கள் சிந்தை என்று மார்தட்டிக் கொள்ளுபவர்களுக்கு சமூகத்தைச் சீரழிக்கும் இததகைய செயல்கள் பிரச்சினையாகத் தென்படவில்லை.

சமூக சீரழிவுப் பிரச்சினையை இனங்கண்டு அதனை நிறுத்தியே தீருவது என்ற உறுதியுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த மே மாதம் ஒன்றுகூடிய உயர் அதிகாரிகள், சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனைக்கெதிரான மாநாடு ஒன்றையும் நடத்தினர்.

### தீர்மானத்தோடு சரி

அந்த மாநாட்டின் முடிவில் கிராம மட்டங்களில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களின் உதவியுடன் கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றெல்லாம் தீர்மானம் எடுத்தார்கள். இதில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் முக்கிய பங்கு வகித்தது.

இதனைப் பார்த்தவர்கள், 'எமது இளம் சந்ததி சமூக சீர்கேடுகளுக்கு எதிராக விழித்தெழுந்துவிட்டார்கள்' என்று எண்ணிமகிழ்ந்தார்கள்.

ஆனால் இன்றுவரை அவர்களால் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக பல்கலைக்கழக சூழலிலேயே மது பாவனை தாராளமாக நடப்பதைக காணக்கூடியதாக உள்ளது. இதனைப் பார்க்க - நினைக்க வெட்கமாகவும் உள்ளது.

இந்த நிலையில் கசிப்பு உற்பத்தியை, விற்பனையை முழுமையாகத தடைசெய்ய வேண்டும் என்று செயற்படும் சில நல்லவர்களும் கசிப்பு உற்பத்தியாளர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இதன் உச்சக்கட்டமாக கடந்த ஜூலை மாதம் புத்தூர்ப் பகுதியில் வைத்து கசிப்பு விற்றவர்களைக் காட்டிக் கொடுத்த இளைஞா ஒருவரின் தலையை பாளை சீவும் கத்தியால் கசிப்பு விற்றவர்கள் சீவி எறிந்ததாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

### சமூகம் திருந்தவில்லை

கடந்த வருடத்தில் மட்டும் பொலீஸாராலும் மதுவரிப் பரிசோதகர்களாலும் கைது செய்யப்பட்ட கசிப்பு உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களிடம் இருந்து நீதிமன்றங்களால் சுமார் 22 லட்சம் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டது.

இருந்தாலும் எமது சமூகம் திருந்தியபாடாக இல்லை. இந்த வருடத்தின் தொடக்கத்திலேயே ஊரெழு கரந்தன் வீதி, உரும்பிராய் பகுதிகளில் 5 வீடுகளில் சோதனையிட்ட மதுவரி பரிசோதகர்கள் கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் ஆயிரத்து 500 லீற்றர் கோடாவையும், 120 லீற்றர் கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர். இவற்றின்மூலம் சமூக சீரழிவுகள் எமது சமூகத்தை எந்தளவுக்கு ஊடுருவிவிட்டன என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

வருமானம் ஒன்றையே இலக்காகக் கொண்டு கசிப்பு காய்ச்சுபவர்கள் தாமாக உணர்ந்து திருந்தி நடக்க வேண்டும்.

கசிப்பு என்ற நஞ்சை குடாநாட்டில இருந்து முற்றாக அழிக்க அதனை காய்ச்சுபவர்களை விரட்டியடிக்க, எவரும் மதுவைக் குடிக்காமல் தடுக்க வீதியில் நிற்கும் குடும்பங்களை, பிரிந்த உறவுகளை ஒன்றிணைக்க கசிப்பைக் குடித்து சாகத் துடிப்பவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சாவில் இருந்து அவர்களை மீட்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். ☆

## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் அரவிந்தன்

இருபாலை, கேணிக்குளம் கும்பப்பிள்ளையைப் பிறப்பிடமாகவும், ஹெரலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் அரவிந்தன 16.02.2002 சனிக்கிழமை ஹொலண்டில் அகாலமரணமானார்.

இவர் இருபாலையைப் பிறப்பிடமாகவும், ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதிகளின் புத்திரனும், ஜங்கரன் (ஹொலண்ட்), வினோதன் (ஹொலண்ட்) ஆகியோரின் சகோதரனும், இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற தியாகராசா இரத்தினம், வதிரியைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பூரணம் (மாத்தளை) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (18.02.2002) திங்கட்கிழமை ஹொலண்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:-*
*M.S.சுப்பிரமணியம (மகான்)*
*இலங்கை போக்குவரத்துச் சபை,பருத்தித்துறை.*

*வதிரிச் சந்தி,*
*கரவெட்டி.* (812)

### வயிரமுத்து பொன்னுத்துரை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து பொன்னுத்துரை 16.02.2002 சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் வயிரமுத்து - அன்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசம்மா, அன்னம்மா, தில்லைநாதன், வள்ளிப்பிள்ளை மற்றும் சிவசம்பு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகமணியின் அன்புக் கணவரும் லீஸ்லீமலர், பூமலர், இரத்தின சோதி (பிரான்ஸ்), இந்திராணி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீபாலன், சிவஞானம், நவரத்தினராசா (கிளிநொச்சி), சிவரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்யா, அகல்யா, போகன்யா, அகிலன், தினேஷ்குமார், நிருஷன், சிகான், தேனுகா, நுவேதா, சுஜீவன் ஆகியோரின் பேரனும் பிரதிக்கா, வஷ்ணிக்கா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(18.02.2002) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
பொ.திலகமணி *(மனைவி)*

*கேணியடி, திருநெல்வேலி.* (826)

## ஆங்கிலக் கல்வி இலவச போதனை

ஆவரங்கால் மகாஜனக் கல்லூரியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் இலவசமாக ஆங்கிலக்கல்வி வாரத்தில் மூன்று நாள்கள் போதிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் ஆரம்பமான இவ் வகுப்புக்களுக்கு வறிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும் ஆங்கில பாடத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். (க-178-ரி)

## கலந்துரையாடல்

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறிக்கான ஆரம்ப கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.(க-178-ரி)

## மாடுகள், கோழிகளுக்கு தடுப்பூசி

மாடுகளுக்கு ஏற்படும் நோய்களுக்கான தடுப்பூசியும், கோழிகளுக்கு அம்மைத் தடுப்பூசியும் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை நவக்கிரி ப.நோ.கூ.சங்கக் கிளைக்கு அருகில் வைத்து வழங்கப்படவுள்ளன.

குறித்த பகுதி மக்கள் தவறாமல் தமது கால்நடைகளைக் கொண்டு வந்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோப்பாய் கால்நடை வைத்தியப் பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (க-72)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 12 . 07 . 1932



உதிர்வு 19 . 01 . 2002

### திருமதி குருசாமி கனகம்மா

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் – எம்மை
நேசமாய் வளர்த்த எமது
அன்புத் தெய்வமே! தாயே!
எமை விட்டு பிரிந்து எங்குற்றாய்?
பேதையே நீ கூறுவாய்!
நீங்கள் மறைந்து விட்டாலும்
அம்மா உந்தன் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு
என்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்திபெற சிவபூதவராயரை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!*

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(825)

உதயன்

## உள்ளூராட்சித் தேர்தலில் உறுதியான நடவடிக்கை

அடுத்த மாதம் மூன்றாம் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆனால் வடக்கு, கிழக்குக்கு வெளியில் இத்தேர்தல்கள் நடைபெறுவது பெரும்பாலும் உறுதி.

இத்தேர்தலில் சுமார் இருபத்தி ஐயாயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். அவர்களில் சுமார் பத்து வீதத்தினர் - இரண்டாயிரத்து முந்நூறுபேர் - பல்வேறு கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் என்ற திடுக்கிடும் புள்ளிவிவரம் தற்போது வெளியாகியிருக்கின்றது.

இந்த 2 ஆயிரத்து முந்நூறுபேரில் ஆயிரத்து ஐந்நூறுபேர் பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள்.

கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடைய வேட்பாளர்களில் பலர் கசிப்பு, ஹெரோயின் போன்ற போதைப்பொருள் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகியிருக்கின்றது.

மற்றும் சிலர் பாதாள உலகத்துடனும், கொள்ளைக் கோஷ்டிகளுடனும், குற்றக் குழுக்களுடனும் தொடர்புடையவர்கள் என்றும் தெரிய வருகின்றது.

இரகசியத் தகவல்கள் மற்றும் புலனாய்வுகள் மூலம் பொலீஸார் திரட்டிய விவரங்களே இவை.

தேசிய அரசியலிலிருந்து உள்ளூர் அரசியல் வரை வன்முறையும், கிரிமினல் போக்கும் ஊறிவருவதையே இந்தப் புள்ளிவிவரங்கள் அம்பலப்படுத்துகின்றன.

தேர்தல்களில் எப்படியும் வெற்றி பெறவேண்டும் என்ற அவா அரசியல் கட்சிகளுக்கு. சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு வழிகளில் எதைப் பின்பற்றியாவது ஆட்சியைக் கைப்பற்றுவதே அவர்களது நோக்கம். அந்த இலக்கை அடைவதற்கு இலகுவானவழி மிரட்டியும், அச்சுறுத்தியும், குறுக்குவழியை நாடியும் வெற்றியை உறுதிப்படுத்தக்கூடிய தகுதி மிக்க கிரிமினல்களின் தயவை நாடுவதுதான் என்று கட்சிகளும், அரசியற் குழுக்களும் கருதுகின்றன. அதன் விளைவே கிரிமினல் கூட்டங்களுக்கு வேட்பாளர் பட்டியல்களில் அதிக இடம்.

இலங்கையின் சரித்திரத்தில் முன்னர் எப்போதும் இல்லாத வன்முறைக் கலாசாரத்தைக் கடந்த பொதுத் தேர்தலில் நாடு சந்தித்தது. அதற்குச் சற்றும் குறைவில்லாத உள்ளூராட்சித் தேர்தலை நாடு இம்முறை சந்திக்கப்போகின்றது என்பதைத்தான் அத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் 'சிறப்புத் தகுதி' பற்றிய புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

என்றாலும், கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில், யுத்தத்தில் சிக்கியுள்ள வடக்கு, கிழக்கிலும் பாதுகாப்புக் கடமைகளில் பொலீஸார் ஈடுபடவேண்டியிருந்தது. அதனால் தேர்தல் வன்முறை நடவடிக்கைகளை ஒடுக்கும் பணியில் அதிக சிரத்தை காட்டுவது அவர்களுக்குச் சிக்கலாக இருந்தது.

இப்போது - அனேகமாக - வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும் வாய்ப்புகள் இல்லை. அத்தோடு யுத்தம் நடந்த பிரதேசங்களில் போர்நிறுத்தம் வேறு.

எனவே, பொலீஸாரும், அவர்களுக்கு உதவக்கூடிய படைப் பிரிவுகளும் கடந்த பொதுத் தேர்தலைப் போலன்றி, இம்முறை தமது கவனத்தை முற்றாக உள்ளூராட்சித் தேர்தலின்பால் செலுத்தமுடியும்.

இந்த வாய்ப்பைப் பொலீஸார் சரிவரப் பயன்படுத்தவேண்டும். தேர்தலில் வெற்றிபெறச் சட்டவிரோத மற்றும் வன்முறைப் போக்கை நாடும் கிரிமினல்களை இரும்புக்கை கொண்டு அடக்கவும் அவர்களை சட்டத்தின் முன்நிறுத்தவும் உறுதியான நடவடிக்கைகளைப் பொலீஸார் எடுக்க வேண்டும். அப்போதுதான் தேர்தலில் வன்முறைக் கலாசாரம் தலையெடுப்பதை தடுக்கமுடியும்.

இல்லையேல் கடந்த பொதுத் தேர்தல் போன்று இந்த உள்ளூராட்சித் தேர்தலும் வன்முறையில் சாதனை நிலைநாட்டுவது நிச்சயம்.

பிரபல பாடசாலைகளை தேடியலைவதை நிறுத்த

# தேசிய பாடசாலைகள் அதிகளவில் அடுத்த வருடம் அமைக்கப்படும்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் கொடித்துவக்கு

கொழும்பு,பெப்.18

பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்க முண்டியடிக்கும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அதிக எண்ணிக்கையிலான தேசிய பாடசாலைகள் அடுத்த வருடம் அமைக்கப்படும் என்று மனிதவள, கல்வி அபிவிருத்தி கலாசார அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

தற்சமயம் கல்வித்துறை எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை இதுவாகும். கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பாக மாற்றுத் திட்டம் எதுவும் இல்லாத காரணத்தால் நிலைமை மிக மோசமடைந்திருந்தது.

கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, கண்டி, குருநாகல் ஆகிய இடங்களில் அடுத்த வருடம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-6-9)

# கருவில் கடலில் அதிகாலை 1 மணிக்கே தொழிலுக்குச் செல்வதற்கு அனுமதி

ஊர்காவற்றுறை,பெப்.18

கருவில் கடற் பிரதேசத்தில் மீனவர்கள் அதிகாலை ஒருமணிமுதல் கடலுக்குச் செல்வதற்குக் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகச் சின்னமடு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் இக்கடற் பகுதியல் அதிகாலை 4.30 மணிக்கு பின்னரே கடலுக்குச் செல்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கி வந்ததாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் எழுவைதீவு, அனலைதீவுப் பகுதிகளுக்குச் சமீபமாக ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு தமக்கு இன்னும் அனுமதி மறுக்கப்பட்டே வருகிறது என்று மீனவத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (க-16)

திறந்த பல்கலைக்கழகத்தின்

# சட்டமாணி கற்கைநெறிக்கு சொற்ப படிவங்களே வந்தன!

## மாணவர்கள் திண்டாட்டம்!!

இலங்கை திறந்த பல்லைக்கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கைநெறியை பயில குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் இதற்கான விண்ணப்ப் படிவங்கள் யாழ்.பிராந்திய அலுவலகத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுப்பப்பட்டுள்ளதால் மாணவர்கள் பலரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

1998ஆம் ஆண்டில் யாழ்.பிராந்திய அலுவலகத்துக்கு 300 விண்ணப்படிவங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

அதன் பின்னர் இந்த வருடமே அங்கு இதற்கான விண்ணப்படிவங்கள் அனுப்பட்டிருப்பதாகவும் அவையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே - அதாவது 150 விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே - தற்போது அனுப்பப்பட்டுள்ளன என்று இயக்குநர் ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் உள்ள ஒரு சில இராணுவ அதிகாரிகளும் சட்டமாணி விண்ணப்படிவத்தைப் பெற்றுச்சென்றுள்ளனர் என்றும் அவர் சொன்னார். சட்டமாணிக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு மேலும் 150இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர் என்றும் -

இவர்களுக்கான விண்ணப்படிவங்கள் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற்றால் மாணவர்கள் அனைவரும் சிரமமின்றி விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த விண்ணப்பப்படிவங்களை 'போட்டோ' பிரதி எடுத்து மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு கடந்த காலங்களில் விசேட அனுமதியுடன் தொடர் இலக்கம் ஒன்றும் அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால் இம்முறை அவ்வாறான முறையில் விண்ணபிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சை

# ஆஸி. நிபுணர்கள் குழுவும் விரைவில் யாழ். வருகிறது

யாழ்.குடாநாட்டில் 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கென எதிர்வரும் மே மாதம் ஆஸ்திரேலியாவில் இருந்து நிபுணர்கள் குழுவொன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

ஆஸ்திரேலியா 'இன்ரப் பிளாஸ்ற்' நிறுனத்தைச் சேர்ந்த குழுவினரே இவ்வாறு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஜேர்மன் உதவி நிதியத்தின் இலங்கைக்கான செயலாளர் பிரான்ஸிஸ் வேதநாயகம் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1995 இல் ஆரம்பிக்கப்பட்ட ஜேர்மன் உதவி நிதியம் இதுவரை இலங்கையில் 2 ஆயிரத்துக்கும அதிகமானோருக்கு 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது.

அதேபோலவே ஆஸ்திரேலிய இன்ரப் பிளாஸ்ற் நிறுவனமும் பல நாடுகளில் இத்தகைய சிகிச்சைகளை மேற்கொண்டுவருகிறது. யாழ். குடாநாட்டு மக்களும் இந்த நிறுவனத்தின் உதவியினைப் பெற்றுப் பயனடையவேண்டும்.

- என்று அவர் கூறினார்.

பிரிட்டிஷ் வைத்திய நிபுணர் குழு தற்போது யாழ்.ஆஸ்பத்திரியில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (க-7-180)

### நாளை

மாசி 07
செவ்வாய்க்கிழமை
(19-02-2002)
திதி : ஸப்தமி
பின்னிரவு 1.13 வரை.
நட்சத்திரம் : பரணி
பிற்பகல் 4.49 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 11.02 - 12.32
ராகுகாலம் : 3.32 - 5.02
(பழைய நேரப்படி)

## அங்குரார்ப்பணம்

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (க-178-ரி)

### உதயவாக்கு

உழைப்பது சன்மானம் பெறுவதற்கே என்று நினைப்பவருக்கு அந்த வேலை கடினமாகவே தோன்றும்.

# நாட்டு நடப்பு

## கோட்டுக்கு வந்த தெய்வம்!

கோயில் வழக்குத் தீர்க்க
கோடொன்று புறம்பாய் வேண்டும்
கோயிலின் பேரைச் சொல்லி
கோஷ்டிகள் மோதிக்கொள்ள
ஆயிரமாய் பணத்தை வீசி
ஆருக்கு இறைவன் என்று
வாயாரச் சட்டம் பேசும்
வம்பினைக் காண்கின்றோம் நாம்.
போயிந்த அநாகரிகம் தன்னை
போக்கிட வேண்டும் மக்கள்
'சீ!' இந்த அநாகரிகச் செய்கை
சிவநிந்தை ஆயிற்றன்றோ!

- *விகடகவி.*

போக்குவரத்துப் பிரச்சினையால்

# நீதிமன்ற அழைப்பாணைக்கு ஏற்ப கைதிகளை ஆஜராக்கமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம் மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ள கைதிகளுக்கான போக்குவரத்து வசதி இல்லாததால் நீதிமன்ற அழைப்பாணைக்கு ஏற்ப கைதிகளை ஆஜராக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கைதிகள் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் வெளிமாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தற்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் கப்பல் மூலம் கைதிகள அழைத்துச் செல்லப்படுவதற்கு அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர். கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் இந்தத் 'தடை' நடைமுறையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கைதிகளைக் கொண்டு செல்வதில் உள்ள போக்குவரத்துப் பிரச்சினையால் களுத்துறை, அநுராதபுரம், திருகோணமலை, வெலிக்கடை சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை இங்கு ஆஜர்செய்ய முடியாத நிலையும், யாழ்.சிறைச்சாலையிலுள்ள கைதிகளை திருமலை, வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சிலரை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்ல முடியாதிருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-180-ரி)

# நியாயமான விலையில் பெற்றோலை யாழ். மக்கள் பெற ஆவன செய்க!

## அமைச்சர் கரு ஜயசூரியவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.மக்கள் நியாயமான விலையில் பெற்றோலைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், எரிபொருள், மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரியவிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் அமைச்சருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பில் ஒரு லீற்றர் பெற்றோல் 50ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் பெற்றோல் 77ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இது கொழும்பு விலையிலும் பார்க்க 54 சத வீதம் அதிகரித்துக் காணப்படுகிறது. இது நியாயமற்றதென்றே யாழ். மக்கள் கருதுகின்றனர்.

இதுகுறித்து கடந்த அரசில் எரிபொருள் அமைச்சராகக் கடமையாற்றியவருக்கு பல தடவை சுட்டிக்காட்டப்பட்டும் ஆக்கபூர்வமாக எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

பெற்றோலை கடல் மூலமாகக் கொண்டுவருவதானாலும் இவ்வாறு விலை அதிகரிக்கத்தேவையில்லை என்றே நாம் கருதுகின்றோம். எனவே இந்த விவகாரத்தில் உரிய மீளாய்வை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)



சேதமடைந்திருந்த சங்கானை தென்னிந்தியத் திருச்சபையின் கிறிஸ்து ஆலயத்தை, அண்மையில் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனம் புனரமைப்புச் செய்தது. இந்த ஆலயத்தை திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (க-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மயிலணி

சைவ மகாவித்தியாலய ஆசிரியை

**திருமதி பா.பத்மநாதன்**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழக "கல்வி முதுமாணி" பரீட்சையில் சித்தியடைந்தமையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
*யா/மயிலணி சைவ.ம.வி.*
*சுன்னாகம்*

(765)

## சேவை நலன் பாராட்டு



எமது
பாடசாலைகளின்
வளர்ச்சிக்காக
அளப்பரிய
சேவையாற்றி
இளைப்பாறும்
எமது அதிபர்

**திரு.க.சண்முகலிங்கம்**

(அதிபர் தரம் II)

அவர்கள் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
*யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.*

(741)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31
-
01
-
1919



மறைவு
01
-
03
-
2001

**அமரர் கதிரன் முதலி**

*(வீட்டுத்தப்பளை - உசன்; மிருசுவில்)*

திதி:18.02.2002 - திங்கட்கிழமை

பண்பின் சிகரமாய், பாசத்தின் திருவுருவாய்
விளங்கிய எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எம்மையெல்லாம் நேசமாய் வளர்த்த தெய்வமே!
ஓராண்டென்ன நூறாண்டுகள் சென்றாலும்
மாறாது உம் நினைவு - எம்மனதில்

*முத்துமாரி அம்மன் கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

- குடும்பத்தினர்.

(737)

## புண்ணியநாச்சி அம்மையாரின் குருபூசை விழா

யாழ். சைவபரிபாலனசபையினர் நடத்தும் புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை தினவிழா நாளை காலை 7.30 மணி முதல் யாழ்.நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் உப தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

வண்ணை சிவன் ஆலயத்தில் விசேட அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து திருமுறை ஓதல், பண்ணிசைப் போட்டியில் முதல்பரிசு பெற்றவர்களின் பண்ணிசை என்பன இடம்பெறும். அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

தொடர்ந்து "விஞ்ஞானத்தில் ஆன்மீகம்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ கு.சிவராசசர்மா நிகழ்த்தும் விரிவுரை இடம்பெறும். இறுதி நிகழ்வாக மகேசுரபூசையும் நடைபெறும்.(க-7)

## வீதியில் 'காட்சி'க்கு நிறுத்தப்பட்ட திருட்டு இளைஞர்!

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வாசலில் பிரதான வீதியில் இளைஞர் திருடிய பொருள்களுடன் கடந்த சனிக்கிழமை காட்சிக்கு வைக்கப்பட்டார்.

"நான் கள்வன்" என்ற விளம்பர அட்டையைக் கழுத்தில் தாங்கியபடி சுமார் 20 வயதுடைய இந்த இளைஞர் காணப்பட்டார்.

கோப்பாய் பகுதியில் பல்வேறு திருட்டுச்சம்பவங்களில் ஈடுபட்டதை இந்த இளைஞர் ஏற்றுக் கொண்டுள்ளார். சவர்க்காரம், மருந்துப் பொருள்கள் மற்றும் களவெடுத்த பொருள்களை விற்பதற்குக் கொண்டு சென்றபோதே பொதுமக்களால் இவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார், (க-11)

## குடத்தனையிலும் உதவி அரச அதிபரின் அலுவலகப் பணிகள்!

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் நிர்வாகப் பகுதி குடத்தனையிலும் வாரத்தில் ஐந்து தினங்களும் இயங்கும்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயராதுள்ள ஐந்து கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது அலுவல்களை இந்த அலுவலகத்திலேயே மேற்கொள்ளலாம் என்று மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

மருதங்கேணியில் இயங்கி வந்த உதவி அரச அதிபர் பணிமனை யுதத நிலைமை காரணமாகவும், அப்பகுதி மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும் தற்போது தும்பளையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (க-182)

## செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் சமூகக்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (க-177)


விற்பனையில் முன்னணியில் திகழும்
**கோபே (KOBE) அன்டனா பூஸ்டர்**
(மிகவும் பாதுகாப்புக் கோண்டு)




உங்கள்
மனங்கவர்ந்த
காட்சிகளை
மிகத்தெளிவாக
திரைகளில்
பார்த்து
மகிழுங்கள்

கோபே என்று கேட்டு வாங்குங்கள்

போலிகளை கண்டு ஏமாறாதீர்!!!

**Nippon Television Cables**

Five Models

3C2V - 0.12 x 32 } 2 Types
3C2V - 0.12 x 48

5C2V - 0.12 x 48 } 3 Types
5C2V - 0.12 x 64
5C2V - 0.12 x 80

RG6U
RG58
RG213
(Communication Cables)

All T.V. Accessories Under One Roof

**LANKA NIPPON**

No.18, Keyzer St. Colombo-11 Tel:437735
No.10, Trelawny Place. (Behind Milk Bar),
Bambalapitiya Junc.Colombo-04.Tel:589992.

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
18
-
10
-
1921



உதிர்வு
19
-
01
-
2002

**பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம்பிள்ளை**

*(பாலா மாஸ்ரர்)*

வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும் வல்வை நகரின் பிரபல ஓவியருமான பாலா மாஸ்ரர் 19.01.2002 அன்று இந்தியாவிலுள்ள திருச்சி நகரில் காலமானார். அன்னாரது 31ஆம் நாள் நிகழ்வுகள் கனடா நகரில் இன்று (18.02.2002) திங்கட்கிழமை அவரது மகனது இல்லத்தில் நடைபெறுகிறது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
*க.குகப்பிரசாதன்*
*சிவன் கோயில் மேற்கு,*
*வல்வெட்டித்துறை.*

(C/20763)

- மகன் ஜோதி
சங்கர் *(கனடா)*
*அவர்களுக்காக.*


இலங்கை வங்கி
ரண் சுரக்கும்
கடன்சேவை

சகல கிளைகளின் மூலம்

உங்கள் அவசர உடனடிப் பணத் தேவைகளுக்கு இலங்கை வங்கியின் 'ரண் சுரக்கும் கடன் சேவை' மூலம் மிக இலகுவில் பணம்.

தங்கத்தின் பெறுமதிக்கேற்ற கூடிய பணமும், நகைகளின் பாதுகாப்பும், இரகசியப் பேணலும் வழங்கப்படுகின்றது.



# வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சைவ சமய நிறுவனங்கள் உழைக்கவேண்டும்

## இந்துசமய பேரவைக் கூட்டத்தில் மெய்யியற்றுறை பேராசிரியர்

யாழ்ப்பாணம்,பெப்.18

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சைவசமய நிறுவனங்கள் முன்னின்று உழைக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத்தின் மெய்யியற்றுறையைச் சேர்ந்த பேராசிரியர் நா.ஞானகுமாரன்.

யாழ்.இந்து சமயப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் ஏழாலையில் உள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் ஞானகுமாரன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வறுமை காரணமாக சைவசமயத்தைப் பின்பற்றும் மாணவர்கள் கல்வி வசதிகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் இத்தகைய நிலைமை காணப்படுகின்றது.

எனவே சமய சேவை சமுதாய சேவை செய்வதற்கு முற்படும் சைவ சமய நிறுவனங்கள் இத்தகைய மாணவர்களை அணுகி அவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி சைவ இளைஞர்கள் பல் கல்விகற்ற பின்னர் உரிய தொழில்வாய்ப்பைப் பெறமுடியாதுள்ளனர். எனவே இத்தகைய இளைஞர்களுக்கான தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் சமய நிறுவனங்கள் ஈடுபடவேண்டும் - என்றார்.

இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தமது உரையில் -

இந்த நாட்டில் நிரந்த யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி, சமாதானத்தை நிலைநாட்டும் பணியில் சமய நிறுவனங்களுக்கு முக்கிய இடம் உண்டு. இந்த விவகாரத்தில் சமய நிறுவனங்கள் கண்ணியமாகவும், தெய்வசித்தத்துடனும் செயற்படவேண்டும்.

இந்து சமயப் பேரவை கடந்த வருடங்களில் ஆற்றிய சமூகசேவைகள் எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்வதற்கு இந்துக்கள் தமது ஆதரவினை வழங்கவேண்டும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ச.சத்தியசீலன் அங்கு உரையாற்றுகையில்-

யுத்தசூழலைக் காரணங்காட்டி கிறிஸ்தவக் குழுக்கள் சில இந்துக்களை தமது மதத்துக்கு மதம் மாற்றுகின்றன. இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை இந்து கலாசார அமைச்சுடன் இணைந்து இந்து சமயப் பேரவை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் உரையாற்றுகையில் -

எமது மதத்துக்கும் இனத்துக்கும் எதிராக வருகின்ற அச்சுறுத்தல்களை நாம் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்க்கவேண்டும் - என்றார். (க-7)

### வீதியைச் செப்பனிட கோரிக்கை

இருபாலை - கோண்டாவில் வீதியைச் செப்பனிட்டு உதவுமாறு நீர்வேலி, கோப்பாய் பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த வருடம் செப்பனிடப்பட்ட இந்த வீதி, அண்மையில் பெய்த பெருமழையின்போது சிதைவடைந்து போக்குவரத்துக்கு சிரமங்களை ஏற்படுத்திவருகிறது.

குறிப்பாக விவசாயிகள் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்துவதற்கு இவ்வீதியினூடாகவே திருநெல்வேலிக்கு எடுத்துச்செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(க-72)

# வடக்கின் அபிவிருத்திப் பணிகள் தடையின்றித் தொடரவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் டக்ளஸ்

கொழும்பு,பெப்.18

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான கே.என். டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதி இல்கா உசிட்டாலோவாவைச் சந்தித்துப் பேசியபோது கேட்டுக்கொண்டார்.

அத்துடன் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பருத்தித்துறை துறைமுகம் என்பனவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் தொடரவேண்டும் எனவும், ஐரோப்பிய ஒன்றியம் வட பகுதியின் அபிவிருத்தி தொடர்பாக கடந்த அரசுக்கு வழங்கிய வாக்குறுதிகள் தொடர்ந்து பேணப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இவற்றை கவனமாகச் செவிமடுத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதி தாம் விரைவில் யாழ்ப்பாணம் செல்ல இருப்பதாகவும் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் கைச்சாத்தாகலாம் என எதிர்பார்க்கப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அம்சங்கள் எனப் பல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலாநிதி எஸ்.விக்கினேஸ்வரன், எஸ்.தவராசா மற்றும் மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

ஈ.பி.டி.பியின் தகவல் தொடர்புச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்தச் சந்திப்புப் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க)

# நீதியாக நடப்பவனை ஒழிக்க முனையாதீர்!

**தவக்காலச்சிந்தனை** — **ஆறாம் நாள்**

இயேசுவின் போதனைகள் மற்றும் நெறிமுறைகள், வல்லமைகளை மக்கள் புரிந்துகொண்டு அவரைப் பின்தொடர்ந்தனர். இது அன்றைய அதிகார வர்க்கத்திற்குப் பேரிடியாக விழுந்தது. இவனை வளரவிட்டால் தமது அதிகார மேலாதிக்கத்திற்குப் பங்கம் ஏற்படும் எனக் கருதிய தலைமைக் குருக்கள் பரிசேயர் அவர்மீது பல பொய்க்குற்றங்களை முன்வைத்தனர்.

'இவன் நமக்குத் தொல்லையாய் இருக்கிறான். நம் செயல்களைக் கண்டிக்கிறான். திருச்சட்டங்களுக்கு எதிரான பாவங்களுக்காக எம்மைத் தண்டிக்கிறான்' (சா.ஞா.2:12) என இயேசுவைக் கொன்றுவிடத் திரைமறைவில் பெரும் சதித்திட்டம் தீட்டினார்கள்.

ஒருவன் உண்மைக்கும் நீதிக்கும் தன்னை அர்ப்பணித்துப் பணிபுரியும்போது அவனது செயற்பாடுகள் நீதியை மறுப்பவர்களுக்குஇடறலாகவே தோன்றும். இவன் எமது குற்றம், குறைகள், தப்பான நெறிமுறைகளை விமர்சிக்கிறான். எமது முகத்திரையைக் கிழித்துக் காட்டுகிறான். எப்படியாவது இவனைப் புறந்தள்ளிச் சமூகத்திலிருந்து அகற்றவேண்டுமென முனைப்புடன் செயற்பட்டு அவரது நற்பாதைக்குக் குழிபறிக்கும் பலர் இன்று எம்மிடையே இல்லையா? இதில் எனது நிலை என்ன?

நீதி, நேர்மைக்காகக் குரல்கொடுப்பதை விடுத்து அநீதி, அடாவடித்தனங்களைக் கண்டும் காணாததுபோன்று நாம் செல்லவில்லையா? உயிருக்குப் பயந்து உண்மைக்குச் சாட்சியம் பகராது வாய்மூடி மௌனியாக நின்ற நிலைமைகள் எத்தனை?

'நீதியின்பால் பசி தாகம் உள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர்' (மத் 5:6)

அநீதி புரிவதும் அதற்குத் துணைபோவதும் ஒன்றேதான். எனவே நீதியை நிலைநாட்ட என்ன இடர்கள் வந்தாலும் வளைந்து கொடுக்காது எம்மை அர்ப்பணிப்போம். இயேசு தம்மை அனுப்பியவரின் நற்குண இயல்புகளைத் தாங்கி வாழ்ந்ததுபோல் நாமும் நற்பண்புகளால் பிறரை மதித்து அரவணைத்து ஏற்றுவாழ வேண்டும்.

குற்றம் கூறுவதை விடுத்து எமது குறைகளைச் சீர்செய்து நீதி நிலைபெற உழைப்போம். நாம் தேடும் நீதியான விடிவு எம்மேல் நிழலிட நாள்தோறும் வேண்டுவோம்.

**எஸ்.யேசுதாஸ்**
*கொழும்புத்துறை.*

# குருநகர் வாடியில் காலை 7 மணிக்கே மீன் விற்பனை

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் மீன்வாடியில தற்போது காலை 7 மணி தொடக்கம மீன் விற்பனைசெய்யப்பட்டு வருவதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

குடாக்கடலில் அதிகாலை, 3மணி தொடக்கம் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பின்னர் மீனவர்கள் நேரத்துடனேயே மீனை வாடிக்கு எடுத்து வந்து விடுகின்றனர்.

இதனால் இந்த மீன்சந்தைக்கு வரும் வியாபாரிகள், பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் மேற்படி சங்கம் தெரிவிக்கின்றது. (க-51)


## சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

31.12.2001 இல் முடிவுறுத்திய வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ரீதியான வாக்காளர் பட்டியல்கள் இடம்பெயர்ந்த காரணத்தால் பின்வரும் இடங்களில் 19. 02. 2002 ஆம் திகதியில் இருந்து 01. 03. 2002 ஆம் திகதிவரை காட்சிப்படுத்தப்படவுள்ளன. வாக்காளர்கள் தவறாது இதனைப் பார்வையிட்டு, ஆட்சேபனை ஏதும் இருப்பின் தலைமைக் காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும். இவ்வாக்காளர் பட்டியல்களுக்கு அமைவாகவே கிளைக்குழுத் தேர்தல்கள் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

***1) தென்மராட்சியில் :***

1. மீசாலை புத்தூர் சந்தி விற்பனை நிலையம்
2. கைதடி நுணாவில் தற்காலிக விற்பனை நிலையம் *(முன்னைய கிளை இல. 05இற்கு அருகில்)*

***2) வடமராட்சியில் :***

1. தலைமைக் காரியாலயம், திருமகள் சோதி வீதி, நெல்லியடி
2. உடுப்பிட்டி விற்பனை நிலையம் *(கிளை இல. 09)*

***3) வலிகாமத்தில் :***

1. சித்தன்கேணி விற்பனை நிலையம் *(கிளை இல. 04)*
2. உடுவில் விற்பனை நிலையம் *(கிளை இல. 07)*
3. உரும்பிராய் விற்பனை நிலையம் *(கிளை இல. 11)*

*எஸ். சுப்பிரமணியம்* — *தலைவர்*
சு. சுந்தரலிங்கம். — *செயலாளர்.*

திருமகள் சோதி வீதி
நெல்லியடி, கரவெட்டி.

(C/20784)



# முதலாம் ஆண்டு நினைவுச்சுடர்

மலர்வு 05 - 12 - 1917



உதிர்வு 21 - 01 - 2001

## செல்லப்பா வேலுப்பிள்ளை *(கிளாக்கர்)*

திதி:துவாதசி

அன்பின் திருவுருவாய் எமக்கெல்லாம் ஆதரவாய் இருந்தீர்!
பண்பின் பிறப்பிடமாய் பாரோர் போற்ற வாழ்ந்தீர்!
காலமெல்லாம் எமக்காகக் கரைந்தீர்!
கண்ணென்று எமையெல்லாம் காத்தீர்!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுடன் வாழும்

*நந்தினி ஸ்ரோர்ஸ்,*
*கைதடி மேற்கு, கைதடி.*

*- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

(775)



## நெஞ்சை விட்டகலாத

# ஈராண்டு நினைவஞ்சலி

உதயம் 15 - 01 - 1944



அஸ்தமனம் 10 - 02 - 2000

## திருமதி சின்னராசி இராசரத்தினம்

திதி:ஷஷ்டி (18.02.2002)

ஈராண்டு எப்படித்தான் நகர்ந்ததுவோ
பாசத்தை அன்போடு எமக்களித்தீர்
உங்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
எந்நாளும் நன்னாளே! நீங்கள் இருக்கும் வரையில்.

*நாவலடி,*
*உடுப்பிட்டி.*

(786)

மயிலன் இராசரத்தினம் *(கணவர்)*
குடும்பத்தினர்.



ஓம்சக்தி அம்பாள் துணை







பருத்தித்துறை, தம்பசிட்டி **அருள்மிகு ஸ்ரீ பண்டாரி அம்மன் கோயில்**

(மஹாமாரி அம்மன் தேவஸ்தானம்)

## விஷு வருஷ மகோற்சவ விழா - 2002

| | | |
|---|---|---|
| 18.02.2002 | - | மாசி 6 திங்கள் - பகல் 12மணி - கொடியேற்றம் |
| 22.02.2002 | - | மாசி 10 வெள்ளி இரவு நவசக்தி அர்ச்சனை, கற்பூரத்திருவிழா |
| 23.02.2002 | - | மாசி 11 சனி மாலை திருவிளக்கு பூஜை |
| 24.02.2002 | - | மாசி 12 ஞாயிறு மாலை 5 மணி வேட்டைத் திருவிழா |
| 25.02.2002 | - | மாசி 13 திங்கள் இரவு 8 மணி சப்பறத்திருவிழா |
| 26.02.2002 | - | மாசி 14 செவ்வாய் காலை 9 மணி தேர்த்திருவிழா |
| 27.02.2002 | - | மாசி 15 புதன் காலை 6 மணி மாசிமகம் (சமுத்திர தீர்த்தம்) இரவு 7 மணி திருவூஞ்சல் - கொடியிறக்கம் |
| 28.02.2002 | - | மாசி 16 வியாழன் சங்காபிஷேகம் - இரவு பூங்காவன உற்சவம் |
| 01.03.2002 | - | மாசி 17 வெள்ளி காலை 7மணி பிராயச்சித்த அபிஷேகம் மாலை 6மணி வைரவர் சாந்தி |

தினசரி விழா காலை 8மணி முதல் 12 மணிவரை மாலை 4மணிமுதல் இரவு 9மணிவரை விழா நிகழ்வுறும்.

மகோற்சவ பிரதமகுரு:- *சிவாகம வித்யாஜோதி பண்டிதர் சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்*
புன்னாலைக்கட்டுவன். (நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

தினசரி மாலை 6.00 மணி சமய சொற்பொழிவு நிகழ்வுறும். *மங்கள இசை:* உடுப்பிட்டி L.J.ஜெயநாதன் குழுவினர்,நெல்லியடி சீவரத்தினம்.

இக்காலங்களில் அனைவரும் ஆசாரசீலராய் வந்து இறையருள் கலந்து அம்பிகை அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.

பரம்பரை அர்ச்சகர்:
ஸ்ரீலஸ்ரீ ச. பாஸ்கரசர்மா, ஸ்ரீலஸ்ரீ ச.இராஜேந்திர தேசிகர்
தம்பசிட்டி, பருத்தித்துறை

அம்பிகை அருள்வழி நிற்கும்:
ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசபாரத்தின தேசிகர்
- ஆதினகர்த்தா -

(794)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

2 1/2 வயது நிரம்பிய டாய்சொன் (பிறவுண் கலர்) பெண் நாயும் 1 1/2 மாதம் நிரம்பிய ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (748)

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் ஓவ்(F)செற் LEGAL SIZE மெசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சொ.விமலன், 593,பருத்தித்துறை வீதி, (யாழ். மாநகரசபை அருகில்) நல்லூர், யாழ்ப்பாணம். (721)

குளிர்சாதனப் பெட்டி உஷா, சிங்கர் (இரு கதவு), டீ-பிறிச் (அகலம் 2"-3") விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.றஞ்சித், 54, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (774)

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பாவித்த 19", 18", 14" SONY COLOUR T.Vக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. T.புஷ்பராஜா, 192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், T.P.No.3408. (801)

ஜமுனாபாறி ஆடும் கடாக்குட்டியும் காமோரி இன குட்டித்தாச்சி மறி ஆடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி, மானிப்பாய். (793)

புதிய SONY (சொனி) டெக் (MADE IN JAPAN) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ.நந்தசீலன், பிப்பிலி வீதி, மானிப்பாய். (820)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. கத்தம் செய்தல் இலவசம். S.கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (779)

## தவறிவிட்டது

1 1/2 பவுண் பென்ரனுடன் கூடிய தங்கச்சங்கிலி கஸ்தூரியார் வீதி, பெரியகடைச் சந்திக்கும் எரிபொருள் நிலையத்தற்கும் இடையில் 16.02.2002 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாரங்கன் நகைமாடத்தில் செல்வம் என்பவரிடம் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.(804)

எழுதுமட்டுவாழைச் சேர்ந்த தி. மாதுரி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.787180248V), விசேட அடையாள அட்டை (இல. 091050448) என்பன கலிகைச் சந்திக்கும் கோச்சந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.தர்மரெட்ணம், C/O ச.தில்லைநாதன் (C.T.B.), பூதவராயர் கோயிலடி, துன்னாலை தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (816)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்: (792)

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண். 2459

## இரவில் கல்வி பயில மின்னொளி வசதி!

சரவணை, சின்னமடு சமூக மாணவர் மன்றத்தினர் சின்னமடு றோ.க.த. கலவன் பாடசாலையில் மாணவர்கள் இரவுநேரத்தில் கல்விகற்பதற்கு வசதியாக ஜெனரேட்டர் மூலம் மின்னொளி வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். அதேசமயம் இப்பிரதேசத்துல் வசிகக்கும் ஆண்டு 5-12 வரைக்கும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தினசரி மாலை வேளையில் மேற்படி பாடசாலையில் இலவச பயிற்சி வகுப்புக்களையும் இம்மன்றத்தினர் நடத்தி வருகின்றனர். (க-16)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 28.11.1973இல் பிறந்த, பூராட நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாய், **5'6", USA** இல் வதிகின்ற படித்த நற்குணமுள்ள மணமகனுக்கு பண்பான மணமகள் தேவை. தொடர்பு: N.செல்லையா, 7ஆம் கட்டை, சங்கானை. (M.O.H Officeக்கு முன்பாக) (811)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 16.04.1976இல் பிறந்த, விசாகம் முதலாம் பாதம், **5'6"**, ஜேர்மனியில் வசிக்கும் (பொன்சர் பண்ணக் கூடிய) நற்குணமுள்ள மணமகனுக்கு பண்பான மணமகள் தேவை. N. செல்லையா, 7ஆம் கட்டை, சங்கானை. (M.O.H Officeக்கு முன்பாக) (812)

## ஒரு காதலின் கதை

50 வருடங்களுக்கு முந்திய இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார நிலைமைகளைச் சித்திரிக்கும் ஒரே ஒரு நாவல். 340 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் பரிசுபெற்ற நாவல். (736)

## பரீட்சைக்கு ஒருவர் மட்டுமே!

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் பாடசாலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை பிரிவேனா, தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலாம் வகுப்பு உள்ளீர்ப்புப் போட்டிப் பரீட்சையில் ஒரேயொரு பரீட்சார்த்தி மட்டுமே தோற்றியுள்ளார்.

சனிக்கிழமை காலையும் மாலையும் நடைபெற்ற இப்பரீட்சைக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே தோற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-51)

## கோழித்தீன் தயாரிக்கும் முறை குறித்து ஆலோசனை

தென்மராட்சி,பெப்.18

யாழ்.குடாநாட்டில் கோழித்தீன்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்துக் குறைந்த செலவில் கோழித்தீன் தயாரிப்பதற்கு வடமராட்சி கால்நடை வைத்தியர் டாக்டர் எஸ்.வசிதரன் ஆலோசனைகளை வழங்கிவருகிறார்.

கோழித்தீன்களைத் தயாரிப்பதற்குரிய தானியங்களின் விவரங்களும், அளவுகளும் கோழி வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம்

அவர்களின்

## நூறாவது பிறந்ததின நினைவு வைபவம்



*காலம்:-* **19.02.2002 செவ்வாய்.**
கந்தையா உபாத்தியாயர் மண்டபம்
தலைவர் **திரு.க.சிவாஜி** *(அதிபர்)*
**நினைவுப் பேருரை:**
ஆசிரியதீபம் S. **ஞானச்சந்திரமூர்த்தி**
*(இளைப்பாறிய ஆசிரியர், ஸ்கந்தா)*

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

*ஸ்கந்தவரோதயக்கல்லூரி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (819)

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று துணைவேந்தர் அவர்களும், விளையாட்டுத் துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்துகொள்ளும் வகையில் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

*காலம்* : நாளை (19.02.2002) செவ்வாய்க்கிழமை
*நேரம்* : மாலை 4.00 மணி
*இடம* : வணிகத்துறை விரிவுரை மண்டபம்

அனைத்து விளையாட்டு அணி மாணவர்களையும் இக் கலந்துரையாடலில் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- செயலாளர்.

*பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,*
*யாழ்ப்பாணம்.* (814)

## 17ஆம் வருட நினைவு அஞ்சலி



### சவிரிமுத்து ஞானப்பிரகாசம்

*(சின்னப்பொடியர் அந்தோனிப்பிள்ளை)*

"என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"
ஆண்டுகள் பல சென்றாலும் என்றும்
அன்பில் நிலைத்து நிற்கும் (815)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*இல,37,6ஆம்குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

# கல்விச்சாலைக் காட்சிகள்



மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் பாடசாலைக்கு இரும்பு உருக்கு அலுமாரி ஒன்றை அன்பளிப்புச் செய்தனர். இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் சம்பந்தப்பட்ட மாணவர்களுடன், வலிகாமம் கல்விவலயப் பணிப்பாளர் வி.இராசையா, பாடசாலை அதிபர் த. சற்குணசர்மா மற்றும் ஆசிரியர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (க-7-152)



சாங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் முன்னாள் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் உதவியுடன் அமைக்கப்பட்ட கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் கட்டடத்தை திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் ச.கைலாசநாதன் காணப்படுகின்றார். (க-7-29)



சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுவரும் இரண்டுமாடிக் கட்டடத்தின் முதல் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இது தொடர்பாக இடம்பெற்ற வைபவத்தில் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுடன் முதல்தொகுதிக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்த இந்திரன் காராளசிங்கம் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (க-7-152)



யாழ். சென்ஜேம்ஸ் மகளிர் றோ.க. பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. அடிக்கல்லை ஈ.பி.டி.பி. உறுப்பினரான கேதீஸ் நடுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் காணப்படுகின்றனர். (க-7-51)

# தமிழ் சுருக்கெழுத்துக் கலை குடாநாட்டில் நன்கு வளரவில்லை

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

நெடுந்தீவு,பெப்.18

தமிழ் மொழியில் பற்றும் ஆர்வமும ஏற்படுத்தக் கூடிய முக்கிய கலையான சுருக்கெழுத்துத்துறை நமது நாட்டில் போதிய வளர்ச்சியடையவில்லை. அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு இத்துறையின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. பல்வேறு துறை சார்ந்த விடயங்களைப் பல்கலைக்கழகக் கற்கை நெறிக்குட்படுத்தும் எமது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் ஆர்வத்தைக் கருத்திற்கொண்டு சுருக்கெழுத்துத் துறையையும் பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக இணைக்க அரச சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கம் முன்வர வேண்டும்.

- இவ்வாறு மத்திய மாகாண அரச சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 'சுருக்கெழுத்து தட்டச்சுத் தொழில்நுட்பக் கலை வரலாறு' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

மேற்படி சங்கத் தலைவர் ரி.கே. இராஜேந்திர ராவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் சிவச்சந்திரதேவா எழுதிய 'சுருக்கெழுத்து தட்டச்சுத் தொழில் நுட்பக்கலை வரலாறு' என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

ஆறு.திருமுருகன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இருபது வருடங்களுக்கு மேலாக இந்நூலாசிரியர் சுருக்கெழுத்துத்துறையில மிகுந்த ஈடுபாடுகொண்டு விளங்கினார் என்பதை பத்திரிகைகளில் வெளியான அவரது எழுத்துக்களைப் பார்த்து அறிந்துள்ளேன்.

நாளைய சமுதாயத்திற்கு இன்றைய தகவல்களைத் தெரியப்படுத்த இத்துறையின் வளர்ச்சி அவசியம். பத்திரிகையாளர்கள் இதன்மூலம் மிகச் சிறந்த - உயர்ந்த - நிலையை எய்த முடியும். இந்தியாவில் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அங்கு நடைபெறும் மாநாடுகளில் உரைகளை சுருக்கெழுத்தாளர்கள் குறிப்பெடுக்கிறார்கள். உலக சைவசித்தாந்த மாநாடு மலர்களைப் பார்த்தால் இதன் முக்கியத்துவத்தை உணரமுடியும்.

கணனியோடு இணைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் இத்துறை பாரிய வளர்ச்சியடைய வாய்ப்புகள் உண்டு. இது ஒரு கலை. இது வளர்ச்சியடையப் பலர் சேர்ந்து ஒத்துழைக்க முடியும் - என்றார்.

யாழ்.தொழில் நுட்ப நிறுவனத்தின் முன்னாள் சிரேஷ்ட சுருக்கெழுத்து, தட்டெழுத்து போதனாசிரியர் திருமதி கமலா பாலசுப்பிரமணியம் பேசும்போது கூறியதாவது:-

1972 இல் மாணவர்கள் இத்துறையில் அடியெடுத்து வைத்த பின்னர் பல சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர்கள் உருவாகினர். சங்க காலத்தில் சுருக்கெழுத்துமுறை இருந்துள்ளதாகப் புலவர்கள் கூறியுள்ளனர். இலங்கையில் பிக்மன் முறையில் இது கற்பிக்கப்படுகின்றது. தமிழ், சிங்களம் ஆகிய தட்டச்சுக்கள் உட்பட அமெரிக்காவில் 87 மொழிகளில் தட்டச்சு உள்ளதாகத் தெரிகின்றது. சுருக்கெழுத்து தட்டச்சுப் பொறிமுறை வளர்ச்சிக்கு உதவியவர் அமரர் முத்தையா.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் அப்பகுதி மக்களுக்கு உதவியது போன்று இங்குள்ளவர்களுக்கு உதவும் வகையில் யாழ்ப்பாணத்திலும் சுருக்கெழுத்துக் கழகத்தை ஆரம்பிக்க முன்வரவேண்டும். இந்த வரலாற்று நூல் இத்துறையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. மாணவர்களுக்குப் பயனளிக்கக் கூடிய ஒரு நூலைத் தந்தமைக்காக சிவச்சந்திரதேவாவை நான் பாராட்டுகின்றேன் - என்றார். (ம-111)

---

**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

**பரிசளிப்பு தினம் - 2001**

*இடம்:–* அழகரத்தினம் மண்டபம்

*காலம்:–* 18-02-2002 திங்கட்கிழமை மு.ப. 9.30 மணி.

*தலைவர்:–* திரு.சி.ஞானேஸ்வரன் (அதிபர்)

*முதன்மை விருந்தினர்*

திருமதி நித்தியலட்சுமி (காங்கேயன்)

(உதவிப் கல்விப் பணிப்பாளர், நல்லூர் கோட்டம்)

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.*

(837)

---

## கண்ணீர் அஞ்சலி

புறோமோட்டர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி லிமிட்டெட் நிர்வாக இயக்குநர் **திரு.நவரட்ணம் சிவகுமார்** அவர்களின் அன்புத் தாயாரும் எமது ஸ்தாபனத்தின் இயக்குநருமான

### திருமதி சிவஞானவல்லி நவரட்ணம்

அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

பிராந்திய இயக்குநரும் பணியாளர்களும் ஊழியர்களும். புறோமோட்டர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி லிமிட்டெட்.

(828)

---

## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவரும், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினருமாகிய **அமரர் வல்லிபுரம் நவரத்தினம்** அவர்களின் துணைவியாரும், தமது கணவரின் ஞாபகார்த்தமாகச் சென்ற ஆண்டு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்துக்கு தீர்த்தக்கேணி அமைத்துத் தந்தவருமாகிய

### சிவஞானவல்லி அம்மையார்

முருகப் பெருமானது திருவடிநிழலை அடைந்தமையையிட்டு எமது ஆத்மார்த்த அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

*மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,*
*கொக்குவில்.*

நிர்வாக சபையினரும் திருப்பணிச் சபையினரும்.

(836)

---

## கண்ணீர் அஞ்சலி

**எமது முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட இறுதிவருட மாணவன் ந.சிவதாசனின் அன்பு மனைவி**

### திருமதி கோமதி சிவதாசன்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம்**
***யாழ்.பல்கலைக்கழகம்***

(834)

---

## துயர் பகிர்கின்றோம்

**எமது கல்லூரி ஆசிரியர் திரு.கு.சோமஸ்கந்தமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தையார்**

### கந்தர் குலசேகரம்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நல்லுறவு மன்றம்,**
**யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.**

(833)

---

## கண்ணீர் அஞ்சலி

**எமது நிறுவன வர்த்தக ஆசிரியர் திரு.ந.சிவதாசன் அவர்களின் அன்புத் துணைவியார்**

### திருமதி கோமதி சிவதாசன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கோண்டாவில்.*

நியூட்டன் அக்கடமி,
*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*

(829)

---


**நாகம்ஸ் சுன்னாகம்**

விஜயகாந்த் (இருவேடம்) சௌந்தர்யா, வடிவேல், வடிவுக்கரசி நடித்த

**தவசி**

(ரீலிஸ்)

காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்) (785)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

இன்றுமுதல்

விவேக், வடிவேலு, குஷ்பு நடித்த

**விரலுக்கேத்த வீக்கம்**

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (C-20767)

**ராஜா யாழ்ப்பாணம்**

இன்று முதல்

பிரசாந்த், சாலினி, மணிவண்ணன் நடித்த

**பிரியாத வரம் வேண்டும்**

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.) (C/20766)


---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூபதி கிருஷ்ணராஜா

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபதி கிருஷ்ணராஜா 16-02-2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணராஜாவின் (பிள்ளையார்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவஞானவதி சிவசுப்பிரமணியம் மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரயோகினி, இந்திராணி, இந்திரகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் சிவகுமார் (ஜேர்மனி), செல்வகுமார் (சுவிஸ்), செல்வயோகினி (கனடா), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணபிள்ளை காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் சாந்தகுமாரி (சுவிஸ்), பத்மகுமாரி, சுபத்திரா (ஜேர்மனி), சண்முகநாதன் (கனடா), ஜெயராணி (சுவிஸ்), சதானந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசம்மா (இராசாத்தி) காலஞ்சென்ற முத்தையா மற்றும் நாகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கஜேந்திரன், செந்தூரன், கோகிலன், காலஞ்சென்ற கௌதாமினி மற்றும் யனார்த்தனி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) திபானி (கனடா), பிரதீபன் (லண்டன்), ரஜினி, ரஜீவன் (கனடா), சஞ்சுதன் (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), மதுமிதா (கனடா), ஷரிசன் (கனடா), சோபிகா (ஜேர்மனி), திருபன் (ஜேர்மனி), தனுஷன் (ஜேர்மனி), ஜனுசா, வேணுகா (சுவிஸ்), டிலூஷன், விதுஷன், டிலு (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
கிருஷ்ணராஜா
(கணவர்)
(கார்ச்சாரதி பிள்ளையார்)

---

## மயில்வாகனம் நவரட்ணம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நவரட்ணம் நேற்றுமுன்தினம் (16.02.2002) சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னப்பிள்ளை தம்பதியின் அன்புப் புதல்வனும் மலரின் அன்புக்கணவரும் சுதாகர், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பூலோகசிங்கம் மற்றும் அருளம்மா, (லண்டன்), மகாலிங்கம் (இலங்கை மின்சாரசபை), மோகனதாஸ் (லண்டன்), கனகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-02-2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (பிரான்ஸில்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*195, திருமகள் வீதி,*
*அரியாலை.*

(830)

தகவல்:
ம.மகாலிங்கம்
(சகோதரர்)

---

## திருமதி வேலுப்பிள்ளை குஞ்சுப்பிள்ளை

மீசாலை வடக்கு, வேம்பிராயைப் பிறப்பிடமாகவும், இல.10, பிறவுண் வீதி, கலட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி வேலுப்பிள்ளை குஞ்சுப்பிள்ளை நேற்று (17-02-2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சிதம்பரநாதன், பேரம்பலம் ஆகியோரின் அன்புத் தாயும், அன்னரத்தினம், கனகம்மாவின் அன்பு மாமியாரும், குணசேகரம் (சுவிஸ்), யோகநாதன் (சுவிஸ்), மணிமேகலை (கனடா), சுகந்தி, கங்கா, யமுனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19-02-2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*இல.10, பிறவுண் வீதி,*
*கலட்டிச்சந்தி அருகில்,*
*யாழ்ப்பாணம்.*

நிரந்தர முகவரி:
*மீசாலை வடக்கு,*
*வேம்பிராய்.*

தகவல்:
வே.சிதம்பரநாதன்
(மகன்)

(838)

---

## திருமதி சபாபதி வள்ளிப்பிள்ளை

திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சபாபதி வள்ளிப்பிள்ளை அவர்கள் 17.02.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும், மதியாபரணம் (கொழும்பு), தனபாலன், காலஞ்சென்ற தனபாலராசா மற்றும் பரிமளகாந்தி, ரஞ்சிதமலர், சற்குணபாலராசா (இத்தாலி), விமலகாந்தி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன் (AOG - மானிப்பாய்), இராஜரட்ணம், கோபால் (நோர்வே), சரோஜினிதேவி, ராதா (இத்தாலி), தங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், தயா, கண்ணன், மோகன், குமுதா, சிவா, மோகன் (நோர்வே), விஜயன் (நோர்வே), ஸ்ரீதரன், கௌரி, தர்சினி, கலா, ராஜி, ஜீவன், குமுதா (நோர்வே), கீதா (2ஆம் வருட சமூகவியற்றுறை மாணவி - யாழ்.பல்கலைக்கழகம்), சுயன், சுபானி, நிஷா (நோர்வே), ரேணுகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

(823)

*தகவல்:*
தனபாலன்
(மகன்)

---

## திருமதி ஈஸ்வரிதேவி விஸ்வலிங்கம்

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஈஸ்வரிதேவி விஸ்வலிங்கம் 16.02.2002இல் காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கத்தின் (கொழும்பு) அன்பு மனைவியும் கோபிதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற ரிஷிகுமார், நளின்குமார் (கச்சேரி - வவுனியா), வளவன் (மல்லாவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா), காலஞ்சென்ற அருள்வேல்நாதன், குணகுமாரி (ஹொலண்ட்) ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி (யாழ்.போதனா வைத்தியசாலை), விஜயரட்ணம் (ஹொலண்ட்) ஆகியோரின் மைத்துனியும் செந்தில்ராணியின் (லண்டன்) அன்பு மாமியாரும் எலக்வியாவின் (லண்டன்) பேர்த்தியாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(C/20794)

*தகவல்:*
செ.காசினி

# குடாநாட்டுக்கான தரைப்பாதையை திறந்துவிடக் கோருகிறார் யாழ்.ஆயர்

## பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.18

நோர்வே அரசின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக குடாநாட்டுக்கான தரைவழிப் பாதையைத் திறந்து விடுமாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடாநாட்டு மக்களின் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண ஐக்கிய தேசியக்கட்சி அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் தரை வழிப்பாதை ஒன்று இல்லாததனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடாநாட்டு மக்கள சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்.

இத்தரைவழிப்பாதை திறக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பல தடவைகளில் முன்னைய அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நாம் அழுத்தம் கொடுத்து வந்துள்ளோம்.

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் இதுபற்றி வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

புதிய அரசு பதவியேற்றதும் சமாதான நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் கொண்டு செயற்படுகின்றது. தமிழர் பிரதேசங்களில் போர் நிறுத்தத்தையும், இயல்பு நிலையையும் ஏற்படுத்த முயலும் இந்த வேளையில் தரைப் பாதைத் திறப்பு பற்றி நாம் மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஒட்டு மொத்தமாகச் சொல்லப் போனால் வடபகுதிவாழ் மக்களின் வாழ்க்கைச் செலவு தரைவழிப் பாதை மூடப்பட்டமையால் வெகுவாக அதிகரித்துள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதும் தரைவழிப்பாதை திறக்க வேண்டியதன் அவசியத்தை அவரிடம் வலியுறுத்தினோம்.

வவுனியாவுக்கும் வன்னிக்கும இடையில் கண்டி வீதியூடாகப் பாதை திறக்கப்பட்டுள்ளது. அதேபோன்று குடாநாட்டுக்கான பாதையும் திறப்பது சமாதான முயற்சிகளுக்குப் பெரிதும் வழிவகுக்கும். இங்குள்ள இராணுவத்தினரும் இதை நிச்சயம் வரவேற்பார்கள்.

ஏ-9 கண்டி வீதி, பரந்தனிலிருந்து இயக்கச்சிவரை வாகனங்கள் சென்றுவரக்கூடிய நிலையில் உள்ளது. விடுதலைப் புலிகள் இப்பாதையிலிருந்த கண்ணிவெடிகளை அகற்றியுள்ளனர். மிருசுவிலிருந்து பளை வரையிலான பாதைக்கும் அவ்வாறு செய்வது கடினமான ஒன்றல்ல. மிகுதிப் பாதையான மிருசுவில் - யாழ்ப்பாணம் பாதை இராணுவத்தினராலும் பொதுமக்களாலும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே வடபகுதி மக்களின் அவசரத் தேவையான இப்பாதையைத் திறப்பதற்கு மிகவும் உகந்த நேரம் இதுவாகும்.

வடபகுதி வாழ் மக்கள் அனைவர் பேராலும் மனிதாபிமான ரீதியில் இவ்வேண்டுகோளுக்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி தங்களை மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, ஜெனரல் லயனல் பலகல்ல, செஞ்சி லுவைச் சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ம-8)

## மீனவர்கள் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு,பெப்.18

வாகரைப் பகுதிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஓட்டமாவடியைச் சேர்ந்த மீனவர்கள் சிலரையும் அவர்களது 12 படகுகளையும் இனந்தெரியாத சிலர் நேற்று கடத்திச் சென்றுள்ளனர்.

இதனைக் கண்டித்து ஓட்டமாவடிப பகுதியில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. ஓட்டமாவடிப் பள்ளி வாசலிலிருந்து ஒலிபெருக்கி மூலம் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

(ம)

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கப்பூர் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு சிங்கப்பூர்ப் பிரதமர் கோ சொக் டொக், சிரேஷ்ட அமைச்சர் லீ குவான் யூ, பிரதிப் பிரதமர் லீ ஹெசின் லூங், வர்த்தக அமைச்சர் ஜோர்ஜ் ஜியோ ஆகியோருடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார். நேற்று அவர் நாடு திரும்பவிருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் ஆரம்பக் கட்டமாக பேச்சுக்கான பேச்சுக்களை மார்ச் அல்லது ஏப்ரலில் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்று பிரதமர் ரணில் நம்பிக்கை வெளியிட்டார் என தூதரகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(உ-6)

## பண்டாரவளையிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயவர்த்தன, அப்படி 'றான்' அமைப்பு, விடுதி அமைக்க முயன்றிருந்தால் அதை அமைச்சர் தி.மகேஸ்வரன் நிரூபித்துக் காட்டட்டும் என்று சவாலும் விடுத்துள்ளார்.

பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் இவ்வாறு கண்மூடித்தனமான குற்றச்சாட்டை தனது சக அமைச்சர் ஒருவருக்கு எதிராகப் பொறுப்பற்ற முறையில் பகிரங்கமாகத் தெரிவித்திருப்பது தனக்கு அதிர்ச்சியையும், விசனத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தெற்கு மக்களின் உதவியைப் பெற்று, வடக்கு - கிழக்கு மக்களுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்வதே தமது நோக்கம் என்று குறிப்பிட்ட அவர், இந்தப் பணியை அமைச்சராக வரமுன்பிருந்தே தான் செய்து வருவதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர் என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிலையைப் புரிந்து கொள்ளாது, மக்களைத் தவறாக வழிப்படுத்தும் விதத்தில் பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிடுவது இனங்களுக்கிடையிலான அமைதியை குலைக்கும் முயற்சியாகிவிடும் என்றும் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் தமது அமைச்சின் உப - அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே மேற்படி குற்றச்சாட்டை அமைச்சர் மகேஸ்வரன் வெளியிட்டிருந்தார். அதன் விவரம் கடந்த சனியன்று உதயனில் பிரசுரமாகியிருந்தது.

போரினால் அழிவுண்ட தென்மராட்சியை அபிவிருத்தி செய்வதை விடுத்து அநுராதபுரத்திலும் பண்டாரவளையிலும் விருந்தினர் விடுதி அமைக்க 'றான்' முயல்வது ஏன்? - என்று அமைச்சர் மகேஸ்வரன் அந்த நிகழ்ச்சியில் வைத்து கேள்வி எழுப்பியிருந்தார்.(உ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறமைசாலிகள் உள்ளனர்."

"மஹிந்தவிடம் திறமைகள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. அவர் கடின உழைப்பாளி களத்தில் வேலையாற்ற மிக அவசியமானவர். அவரை சிறந்த வீதிப்போராட்டக்காரர் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் நாடாளுமன்றம் தெருவல்ல என்பதை சுட்டிக காட்ட விரும்புகின்றேன்" - என்றும் அனுரா குறிப்பிட்டார்.

ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு அடுத்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வசம் உள்ள உயர்பதவி எதிர்க்கட்சித் தலைவர் பதவியே. அந்தப் பதவியைக் கைப்பற்றியதன் மூலம் முன்னணிக்குள் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு அடுத்த நிலையை தான் கைப்பற்றியிருப்பதாக மஹிந்த ராஜபக்ஷ கருதுகின்றார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது அந்த வேட்பாளர் பதவிக்கு மஹிந்த ராஜபக்ஷவும் முழு மூச்சாக முயல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி குமாரதுங்க மூன்றாவது தடவை அப்பதவிக்குப் போட்டியிடுவதற்கு தற்போதைய அரசமைப்பு இடம்கொடாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கு அனுப்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையிலான நடவடிக்கைகளைத் தெற்கில் ஜே.வி.பி. போன்ற அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

"இவ்வாறான வேளையில் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் அமைதி காத்து வருவது இவர்களின் செயலை நியாயப்படுத்துவது போன்று அமைந்துவிடும்.

"எனவே தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில், எந்தவித அரசியல் கலப்படமும் இல்லாது இந்தப் பாத யாத்திரையை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்" - என்று மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிந்து புதிய அரசு ஆட்சிக்கு வந்துவிட்ட பின்னர் அரசியல் கட்சிகளாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தமக்கு ஏதேனும விடிவு ஏற்படும் என்று காத்திருந்த மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டனர்.

இந்த நிலையில் சமாதானத்தின் மீதான தமிழ் மக்களின் ஆவலை வெளிப்படுத்தும் விதமாக இந்தப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(ம-6-9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
ஆண்டு பத்தொடு எழுபதிலாகச் சேவை செய்யும் மாண்புறு வர்த்தகநிலையம் புத்தெழில் பெற்று
மீண்டும் நீண்டதோர் சேவைக்காக நிமிர்ந்திடும் நிலையம்
சிவன் ஸ்ரோஸ்
வாழ்க வளர்க பல்லாண்டு
பல்பொருள் வணிகத்தோடு பாங்கான செய்தித்தாள்கள்
பாடசாலை, பல்கலைக்கழக மாணவர் வேண்டும்
அத்தனை பொருளும் அன்புடன் சந்தும்
Gas சிலிண்டர்கள் மற்றும் வேண்டியதனைத்தும்
விரும்பினால் வீட்டு வாசலில் தந்திடும் பண்புடைய ஊழியர்
தகமையும் வாழ்க பல்லாண்டு!
குமார் வெதுப்பகம்
28, சென்.செபஸ்ரியன் வீதி,
பாசையூர்,
யாழ்ப்பாணம்.
சிவன் கிறீம் ஹவுஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
கண்ணன் லொட்ஜ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(C/20793)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!
புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் விஷு வருடம் மாசி மாதம் 6 ஆம் நாள் இன்று (18-02-2002) திங்கட்கிழமை முற்பகல் 10.08 முதல் 11.00 மணிவரை (பழைய நேரம்) வரும் சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்
ஜனனி நகைப்பூங்கா
JANANI JEWELLERY
என்னும் புதியதொரு ஸ்தாபனத்தைத் திறந்து ஆரம்பிக்கவுள்ளோம். அதுவே அத்தருணம் எமது அன்பர்கள். நண்பர்கள். வாடிக்கையாளர்கள், உறவினர்கள் அனைவரையும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
J 275
22C
தங்கள் வரவை எதிர்பார்க்கும்
உரிமையாளர்கள்
திரு.திருமதி க.வரதராசா, திரு.ம.சதீஸ்குமரன் (நாவற்குழி)
No.275, Kasthuriar Road,
Jaffna.
இல 275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி20790)

புதிய வீடியோ CD வெளியீடு
மாதவன், சிம்ரன்
☆ கன்னத்தில் முத்தமிட்டாள்
(பிரதிகள் உடன் பெறலாம்)
விஷ்ணு வீடியோ
கோண்டாவில். (839)

தேவை
போட்டோப் பிரதி எடுக்கும்
இயந்திரம் இயக்கத் தெரிந்த
பெண்கள் தேவை.
தொடர்பு:
ஐடியல் கிறீம் ஹவுஸ்
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O.P.D. முன்பாக)
(824)

பெற்றோர் மாணவர்களினது
வேண்டுகோளிற்கிணங்க நல்லூரில்
அமைதியான சூழலில்
தரம் 5,9,10,11 வகுப்புகள்
யாழ்.பிரபல பாடசாலை
ஆசிரியர்களுடன்
ஆரம்பமாக உள்ளன.
அனுமதி
I.B.S. கண்டிக்குளி
I.B.S. கோயில் வீதி
ஒரு பிரிவில் 30 பேர்
மட்டுமே.
அனுமதிக்கு முந்துங்கள்.
(831)

ஆரம்பம்
corelDRAW
Page Maker
Photo Shop
மேலதிக விபரங்களிற்கு
STP 54A, Palaly Road, Jaffna.
T.P.:2674

UNIVAC
College of Computer Information Technology
புதிய கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்.

| Diploma Courses | Certificate Courses |
| --- | --- |
| Mastering Microsoft Office -(3 Months)<br>Computer Programming- (10 Months) | M.S Word, M.S Excel, Pascal, M.S Access, Java, Visual Basic (Each 3 Months) |

☛ சகல பயிற்சிநெறிகளும் 18.02.2002 திகதி 3.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.
☛ உத்தியோகத்தர், மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பிரத்தியேக வகுப்புக்கள் (7.30p.m. வரை) நடைபெறவுள்ளன.
☛ மாணவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
குறைந்த கட்டணத்தில் விரிவான பாடத்திட்டத்தின்படி முழுமையாக பயிற்சி நெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதே UNIVAC நிறுவனத்தின் தனித்துவம்
1201,K.K.S.Road, Jaffna. | Pointpedro Road, Atchuvely. | Director Sureskumar.
(827)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.